உ

மிருச்சகடி.

(தமிழ் நாடகம்.)

சூத்ரககவியின் ஸம்ஸ்கிருத நாடகத்தை

யனுசரித்து

மதுரை ஹைகோர்ட்டு வக்கீல்

ப. கிருஷ்ணசாமி சாஸ்திரியள் B. A., B L.

எழுதியது.

PUBLISHED BY

P. N. Chidambara Mudaliar Bros.,

...ers, Book-sellers, & Stationers,

MADURA.

1926 [As. 0-8-0

...hts reserved by the Author.

MADRAS

O-,2MKS,M
N26
184407

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 JUL 1926
MADRAS

உ

மிருச்சகடி.

தமிழ் நாடகம்.

சூத்ரககவியின் ஸம்ஸ்கிருத நாடகத்தை யனுசரித்து

மதுரை ஹைகோர்ட்டு வக்கீல்

ப. கிருஷ்ணசாமி சாஸ்திரியள் பி.ஏ., பி.எல்.,

எழுதியது.

2946
894811

சென்னை:

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ் ஏஜண்ட்

மு. கிருஷ்ண பிள்ளை அவர்களால்,

மதுரை மீனாக்ஷி விலாஸ் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

காப்பி ரைட்] 1926 [விலை அணா 8

O, 2 m1ks; M
N26
தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
184407
சென்னை-600 008

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 JUL 1926
MADRAS

PREFACE.

Writing a preface to a book is a much harder task than adapting a Sanscrit play in Tamil. **" Mricchakati "** or the **" Toy Cart "** was adapted by me for being staged in Tamil several years ago. The performance was pronounced a success; and at the instance of several of my friends, especially my enthusiastic young friends of the Madura Dramatic Club, I am offering it to the Public in print. The book does not claim any literary merit. If it affords a few minutes' pleasant reading or helps a Dramatic Society with a handy rendering of an ancient play, my labours would be amply recompensed. It may be difficult to enact Scence 9 as two carts have to be introduced on the stage. I leave it to the ingenuity of the actors to get over the difficulty or omit the scene altogether. The thread of the narrative will not suffer by the omission.

Madura
Dramatic Club.
31st May '26

The Author.

மிருச்சகடி.

நாடகப்பாத்திரங்கள்.

சாருதத்தன்—உஜ்ஜயினியில் ஓர் பிராமணன்.

மைத்ரேயன் (விதூஷகன்)—சாருதத்தன் தோழன்.

சர்விளகன்—உஜ்ஜயினி பிராமணன்.

ரோஹஸேனன்—சாருதத்தன் புத்ரன்.

ஸம்வாஹகன்—ஓர் சூதாடி.

சகாரன்—பாலகராஜன் மைத்துனன்.

விடன்—சகாரன் தோழன்.

ஆர்யகன்—உஜ்ஜயினி அரசன்.

சேடன்— சகாரன் வேலையாள்.

வஸந்தஸேனை—சாருதத்தனை நேசிக்கும் ஓர் வேசி.

ரதனிகை—சாருதத்தன் வேலைக்காரி.

மதனிகை—வஸந்தஸேனை வேலைக்காரி.

தூதா—சாருதத்தன் மனைவி.

சூதாடிகள், அதிகாரி, செட்டி, காயஸ்தன்,
பரயர்கள், முதலானவர்கள்.

மிருச்சகடி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 5 JUL 1926 MADRAS

காக்ஷி 1.

[ஓர் கோயிலுக்குமுன் வஸந்தஸேனை தேவியை தோத்திரம் செய்துகொண்டு நிற்கிறாள்]

சகாரன், விடன், சேடன், வருகிறார்கள்.

[அவர்களைக்கண்டதும் வஸந்தஸேனை அவ்விடத்தை விட்டுப்போக முயலுகிறாள்]

விட. வஸந்தஸேனே! நில். ஏன் உன் மெல்லிய உடலை வருந்தச் செய்து பரதசாஸ்திரத்தில் தேர்ந்த உன் கால்களை நோகச் செய்து புலியால் துரத்தப்பட்ட மான்குட்டிபோல் பயந்து ஓடுகிறாய்.

சகா. வஸந்தஸேனே, நில். ஏன் ஓடுகிறாய்? கோபித்துக்கொள்ளாதே. உன்னைக்கண்டு என் மனது நெருப்பிலே விழுந்த பூந்தளிர்போல் கொதிக்கிறதே. உன்னை நினச்சு நினச்சு எனக்கு ராத்திரி எல்லாம் தூக்கமேயில்லே. ஏன் ராவணனைக்கண்ட குந்தியைப்போல ஓடரே.

விட. வஸந்தஸேனே, ஏன் பயப்படுகிறாய்? உனக்கு நான் யாதொரு தீங்கும் செய்யவில்லை.

சகா. ஐயா! நான் இவளை எவ்வளவு வேண்டியும் என்னைக்கண்ணெடுத்து பார்க்கமாட்டேன் என்கிறாள் ஜல்ஜல்லென்றொலிக்கும் நகை யெல்லாம் போட்டுக்கொண்டு ராவணன் கிட்ட பயந்த திரௌபதிபோல் ஓடுகிறாள். இருக்கட்டும். ஹனுமான் விசுராவசு தங்கச்சி சுபத்ரையைத் தூக்கிக்கொண்டுபோனாப்போல் நான் இவளை தூக்கிக்கொண்டு போகிறேன்.

வஸந். பல்லவிகே! பல்லவிகே! பரபிருதிகே!

சகா. [பயந்து] ஐயா புருஷாள்போலிருக்கிறதே.

விட. ஏன் பயப்படுகிறாய்.

வஸந். மாதவிகே! மாதவிகே.

விட. [சிரித்து] அடமுட்டாளே. தோழிகளை அழைக்கிறாள்.

சகா. ஐயா. ஆனால் வேலைக்காரிகளையா கூப்பிடுகிறாள்.

விட. ஆம்.

சகா. 100 ஸ்திரீகளைக்கொன்றுவிடுவேன். நான் என்ன சூரனில்லையா.

வஸந். ஐயோ. வேலைக்காரிகளைக்காணோமே. நான் என்ன செய்வேன்.

விட. தேடு. தேடு.

சகா. வஸந்தஸேனே! பல்லவத்தையோ, கோகிலத்தையோ, வசந்தமாத அடையாளங்கள் எல்லாவற்றையுமோ கூப்பிடு. இப்பொழுது எப்படி ஓடுவது. எவர் வந்தாலும் வரட்டும் அவன் ஜமதக்கினி புத்ரன் பீமன், குந்திமகன் ராவணன், யாராயிருந்தாலென்ன. அந்த துச்சாதனன் தலைமயிரைப் பிடித்திழுத்துப்போட்டாற்போல் போடுகிறேன்.

வஸந். ஐயா நான் பெண்ணல்லவா.

விட. அதனாற்றான் ஆதரிக்கப்படுகிறாய்.

சகா. அதுதான் உன்னைக்கொல்லவில்லை.

வஸந். [தனக்குள்] இவன் வேண்டுகோளே இவ்வளவு பயங்கரமாயிருக்கின்றது. இருக்கட்டும் [விடனிடம்] ஐயா இதோ சில நகைகள் இருக்கின்றன.

விட. போதும். புஷ்பங்கள் கொய்த கொடியின் சோபை என்னவாம்.

வஸந். ஆனால் வேறென்ன.

சகா. நான் பெரிய மனுஷன். ரொம்ப அழகுடையவன். பேர் வாசுதேவன். என்னை கல்யாணம்

வஸந். போதும் போதும். என்ன தகாதவார்த்தை சொல்லுகிறீர்.

விட. வஸந்தஸேனே! என்ன. உன் ஜாதியைமறந்து பேசுகிறாய். வேசியின்வீடு யாவரும் நுழையக்கூடியதன்றோ. பாதையோரம் இருக்கும் புஷ்பத்தை யாரும் நுகருவார்கள். பிரியமோ அப்பிரியமோ வேசிதனிகனை யடையவேண்டியவள் தானே. குளமென்றிருந்தால் பிராமணனும் ஸ்னானம் செய்கிறான், பஞ்சமனும் ஸ்னானம் செய்கிறான். ஒரே கொடியில் மயிலும் உட்காருகிறது, காக்கையும் உட்காருகிறது. ஓடத்தில் எல்லா ஜாதியாரும்தான் ஏறுகிறார்கள். ஆகையால் நீ இவ்வாறு சொல்லலாமா.

வஸந். காதலுக்குக் காரணம் குணமேயல்லாது நிர்ப்பந்தமல்லவே.

சகா. ஐயா விடரே. வசந்தோச்சவம் முதல் இவள் அந்த தரித்திரன் சாருதத்தனைக் காதலிக்கிறாள். என்னைத் திரும்பிக் கூடப்பார்க்கமாட்டேன் என்கிறாள். இந்தத்தெருவில்தான் அவன் வீடு. நம்மிடம் தப்பித்துக்கொண்டு எப்படியாவது அவன் வீட்டிற்குப் போய்விடப்போகிறாள்.

விட. [தனக்குள்] எதையொளிக்கவேண்டுமோ அதையே பிதற்றுகிறான். ஆ! ஹா! வஸந்தஸேனை சாருதத்தரையா காதலிக்கிறாள். ஹம்ஸப்பேடை ஹம்ஸத்தைதானே நாடும். [சகாரனிடம்] அப்படியா? இத்தெருவில்தானா அவர் வீடு.

சகா. ஆம், ஆம்.

வஸந். [தனக்குள்] ஆம். இத்தெருவில்தான் அவர் கிருஹம். இவர்கள் துஷ்டர்களாயினும் எனக்கு நன்மையே செய்தார்கள். காதலர் தர்சனமும் ஏற்பட்டது.

சகா. ஐயா, இருட்டு அதிகமாயிருக்கிறது. அவளைக்காணோமே.

விட. ஏதாவது அடையாளங்கள் தெரிகின்றனவா.

சகா. அப்படியென்றால் என்ன.

விட. நகைகள் சப்தம் அல்லது புஷ்பவாசனை.

சகா. பூ வாசனை கேட்கிறது. ஆனல் இந்த இருட்டிலே நகைச் சத்தம் பார்க்கமுடியவில்லை.

விட. வஸந்தஸேனே! உன்னை நேரில் பார்க்கமுடியாவிடினும் உன்னுடைய சலங்கை சப்தமும் புஷ்பவாசனையும் காட்டி விடுகின்றன. கேட்டதா.

வஸந். [தனக்குள்] கேட்டது, தெரிந்தது. [சலங்கைகளையும் புஷ்பத்தையும் கழற்றிவிடுகிறாள். போகிறாள். விடனும் சகாரனும் அவ்வழியே போகிறார்கள்.]

காக்ஷி. 2.

[சாருதத்தன் வீட்டின் முன்புரம்]

[விதூஷகன் கோபத்துடன் வருகிறான்.]

விதூ. ஐயா, யாரைச்சொல்லி என்ன பயன். நம்முடைய அதிர்ஷ்டம் அவ்வளவுதான். என்னை துலையில் காணும்பொழுதே மேல் வேஷ்டியை அரையில் கட்டும் இந்தப்பயல் என்னை நிமந்திரணத்திற்கு கூப்பிடுகிறான். .... உம் .... உம் .... சாருதத்தர் பணப்பெருக்கும் போச்சு. நம் கதியும் இப்படியாச்சு. இந்த அங்கவஸ்திரத்தை ஜூர்ண விருத்தரிடம் சாருதத்தர் அனுப்பியிருந்தாராம். அதில் ஜாதிப்பூ வாசனை யேற்றி இப்பொழுது திருப்பியனுப்பியிருக்கிறார். சாருதத்தர் அதோ வருகிறார். பூஜைமுடிந்துவிட்டதுபோலும்.

[சாருதத்தன் பூஜைமுடித்து பலியை எடுத்துக்கொண்டு வருகிறான்.]

சாரு. [உயரப்பார்த்து பெருமூச்சுவிட்டு] ஆ! ஹா! எந்தவிடத்தில் ஹம்ஸங்களும் மயில்களும் சண்டையிட்டு நானிட்ட

பலியை ஆவலுடன் தின்றனவோ, அவ்விடத்தில் புல் முளை த்து புழுக்கள் நெளிந்து காடடைந்து போயிற்றே! யாரது? மைத்திரேயனு. மைத்திரேயா! வா உட்கார்.

விதூ. நண்ப. ஜூர்ணவிருத்தன் இவ்வங்கவஸ்திரத்தை தம்மிடம் சேர்ப்பிக்கச்சொன்னான்.

[சாருதத்தன் அங்கவஸ்திரத்தை வாங்கிக்கொண்டு யோசித்தவண்ணம் சும்மாவிருக்கிறான்]

விதூ. என்ன பலத்தயோசனை.

சாரு. எப்பொழுதும் துக்கத்தை யனுபவித்தபிறகு சுகம் பெருவது மேலானது. இருட்டிலிருந்தவன் வெளிச்சத்திற்கு வருவதுபோல. ஆனல் சுகத்திலிருந்துவிட்டு எவனொருவன் தாரித்திரனாகிறானோ அவன் உயிர்த்திருந்தும் மரித்தவனுக்குச் சமானமே.

விதூ. நண்ப. தாரித்திரியம், மரணம் இது இரண்டில் உனக்கு எது பிரியம்.

சாரு. மரணமே எனக்கு பிரியம். மரணத்தில் சிரமம் சொல்பம் தாரித்திரியமோ தீராத்துக்கம்.

விதூ நண்ப, வருந்தாதே. நண்பர்களுக்கு தனத்தையளித்த நீ தேவர்களால் அருந்தப்பட்ட கலைகளுடைய சந்திரனைப் போல் சோபிக்கிறாய்.

சாரு. நண்ப. பொருள் போனதற்காக நான் விசனப்படவில்லை. மதம் நீங்குங்கால் மதயானையை வண்டுகள் விலகுவதுபோல அதிதிகள் நம்வீட்டைவிட்டு விலகுகிறார்களே. பணம் வருங்கால் வரும், போகுங்கால் போகும். சிநேகிதர்கள் என் கைவிடவேண்டும். தாரித்திரியத்தால் ஒருவன் அவமானத்தையடைகிறான். அவமானத்தால் ஒளி அழிகின்றது. ஒளியழிந்தால் இகழப்படுகிறான். இகழ்ச்சியால் வருத்தம் ஏற்

படுகின்றது. வருத்தத்தால் புத்தி அழிகின்றது. புத்தியீனன் நாசத்தை யடைகின்றான். தாரித்திரியம் எல்லாத் தீமைகளையும் விளைக்கின்றது.

கவலைக்குக்காரணம். சிநேகிதர்களும் பந்துக்களும் வெருப்பதற்கு மூலம். காட்டிற்குக் செல்வதற்கு மனம் வந்துவிடும். சொந்த மனைவியும் மதியாள். மனத்தினுள்ளிருந்து எரிக்காமலே பொசுக்கும் ஒரு நெருப்பு.

நண்ப, நான் கிருஹதேவதைகளுக்கு பலி சேர்ப்பித்தாய்விட்டது. நீ கிராம தேவதைகளுக்கு வாயலில் கொண்டுபோய்க்கொடு.

விது. நான் மாட்டேன்.

சாரு. ஏன்.

விது. ஆம், இத்தனை நாள் பூஜை செய்ததால் தேவதைகள் என்ன பிரீதியடைந்தார்கள். அவர்களை பூஜித்து என்னபலன்.

சாரு நண்ப, அப்படியல்ல இது கிருஹஸ்தனுடைய நித்யவிதி. போ. பலியைகொண்டுபோ.

விது. ஐயா. வேறு யாரையாவது போகச்சொல்லும். நான்போனால் கண்ணாடியில் தெரியும் நிழலைப்போல் எல்லாம் தாருமாராகவே முடிகிறது. சாயங்காலவேளையில் தெருவில் போக்கிரிகள் சஞ்சாரம் செய்வார்கள். எனக்கு ஏதாவது கெடுதி கட்டாயம் நேரிடும். இருக்கட்டும். நீர் என்ன செய்கிறீர்.

சாரு. ஹா! தாரியத்தின் கொடுமையை என்னவென்று சொல்வது. ஒருவனுடைய பந்துக்களும் வார்த்தையை மதிப்பதில்லை. ஆபத்துக்கள் அதிகமாகின்றன. பலம் குன்றுகின்றது. சீலம் அழிகின்றது. எந்தக்கேடு எவன் செய்தாலும் இவனே என்று சந்தேகிக்கிறார்கள். யாரும் இவனுடன் சேருவதில்லை. ஆதரித்துப்பேசுவதுமில்லை. தனிகர்

கள் இழிவுடன் பார்க்கிறார்கள். தாரித்திரியத்தை ஆறு வது மகாபாதகமென்றே சொல்லலாம்.

ஹா! தாரித்திரியமே! என்னுடைய உடலையே உன்னுடையதாகப்பாவித்துக் குடியிருக்கும் நீ நான் சரீரவியோகமானால் என்னுடையதென்று எதைக்கொண்டாடுவாய்.

விதூ. நண்ப, நான்தான் போகவேண்டுமானால் ரதனிகையைக்கூட அனுப்பு.

சாரு. ரதனிகே, மைத்திரேயன் கூடப்போ.

[ரதனிகை வருகிறாள்.]

ரதனி. அப்படியே.

விதூ. ரதனிகே, தீபத்தையும் பலியையும் எடுத்துக்கொள். நான் கதவைத்திறக்கிறேன். [கதவைத்திறக்கிறான்]

[வஸந்தஸேனை வருகிறாள்]

வஸந். என் சௌகரியத்திற்காகவே கதவு திறக்கப்பட்டதுபோலும். இதென்ன கஷ்டம் தீபம் கொண்டுவருகிறார்களே. [வஸ்திரத்தால் தீபத்தை அவித்துவிடுகிறாள்]

விதூ. கதவைத்திறந்தவுடன் காற்று தீபத்தை அவித்துவிட்டது. ரதனிகே! நீ போ. நான் உள்ளே போய் விளக்கை ஏற்றிக் கொண்டு வருகிறேன்.

[வஸந்தஸேனை வீட்டிற்குள் பிரவேசிக்கிறாள்]

[சாகரன், விடன், சேடன் தெருவில் வருகிறார்கள்]

சகா. ஐயா நான் வசந்தசேனையை கண்டுபிடிக்கட்டுமா.

விட. எங்கே பிடி பார்ப்போம்.

சகா. [விடனைப்பிடித்து] ஐயா அகப்பட்டாள் அகப்பட்டாள்.

விட. ஐயா, நான் விடன்.

சகா. ஆனல் நீ இங்கிரு. [மறுபடிமம் தேடி சேடனைப்பிடித்து] ஐயா பிடித்துவிட்டேன், பிடித்துவிட்டேன்.

சேட. ஐயா, நான் சேடன்.

[ரதனிகை தெருப்பக்கம் வருகிறுள்.]

சகா. இதோ விடன், இதோ சேடன், இருக்கட்டும். [மறுபடியும் தேடி ரதனிகையைப்பிடித்து] ஐயா பிடித்தேன் வசந்த சேனையை. இருட்டிலே ஓடி புஷ்பவாசனையால் காட்டப் பட்டு சாணக்கனல் பிடிக்கப்பட்ட துரௌபதைபோல அக ப்பட்டுக்கொண்டாள்.

விட. உத்தமபுருஷனைச் நாடிச்சென்ற உன்னுடைய புஷ்பங்களே யணியவேண்டிய கூந்தல் இவன் கையிலா அகப்பட்டது.

சகா. பார்த்தாயா! பிடித்துவிட்டேன். என்னதான் கதறினும் விடுவேனு.

ரதனி. ஐயா என்ன காரியம் செய்கிறீர்கள்.

விட. என்ன! வேறு குரல்போலிருக்கிறதே.

சகா. ஐயா பூனை நெய்யைக்குடிக்க குறலை மாற்றிக்கொள்வது போல் இவள் மாற்றிக்கொண்டிருப்பாள்.

விட. அப்படியுமிருக்கலாம். பரதசாஸ்திரத்தில் தேர்ந்த இவ ளுக்கு இதுவுமோர் கஷ்டமா.

[விதூஷகன் விளக்குடன் வருகிறுன்]

விதூ. காற்றில் விளக்கு நடுங்குகின்றதே. பசுபந்தத்தில் ஆட்டின் மனதைப்போல. ரதனிகே.

சகா. ஐயா, ஐயா, புருஷன்போலிருக்கிறதே.

விதூ. ஐயா, இதென்ன அநியாயம்! இது யோக்கியமா! சாருதத் தர் ஏழையாய் விட்டால் அவர் வீட்டிற்குள் இப்படிக்கூட நுழையலாமா.

ரதனி. ஐயா, நம்மைச்செய்யும் அவமானத்தைப்பாரும்.

விதூ. உன்னை. நமக்கென்ன அவமானம்.

ரதனி. தங்களுக்குத்தான்.

விதூ. இதுவென்ன அக்கிரமம். பலவந்தமா?

ரதனி. ஆம்.

விதூ. உண்மையில்.

ரதனி. சத்தியமாய்.

விதூ. யாரவன் [தடியை ஓங்கிக்கொண்டு] இதோ பார். மண்டையை உடைத்து விடுகிறேன்

விட. வேதியரே! மன்னிக்கவேண்டும்.

விதூ. என் ஐயா, சாருதத்தர் வீட்டிற்குள் நுழைந்து இப்படிச் செய்யலாமா?

விட. பிருமணோத்தமா, மன்னிக்கவேண்டும். வேறொரு ஸ்திரீ என்றெண்ணி இப்படி நேர்ந்தது. மன்னிக்கவேண்டும். [கைகூப்பி நமஸ்கரித்து விதூஷகன் பாதத்தில் விழுகிறான்]

விதூ. ஐயா, எழுந்திரும்.

விட. தாங்கள் எனக்கு உறுதி கூறினால் எழுந்திருப்பேன்.

விதூ. என்ன வேண்டும்.

விட. தாம் இதை சாருதத்தருக்குத் தெரிவிக்கக்கூடாது.

விது. இல்லை.

விட. இவ்வுதவியை எப்பொழுதும் மறவேன்.

சகா. ஏன் ஐயா, இந்தப்பாப்பானைக்கும்பிட்டு விழுந்தாய்.

விட. சாருதத்தர் குணங்களுக்குப்பயந்து.

சகா. நல்லாச்சொன்னே. வீடு முழுக்க ஒருபருக்கைகூடயில்லே.

விட. கோடைக்கிணறுபோல பிறருக்குதவிவற்றினவரிவர். பிறருக்கில்லையென்று சொன்னதில்லை. அவர் குணங்களை என்னவென்று சொல்வது. வா, போவோம்.

சகா. வஸந்தஸேனையை விட்டு விட்டா?

விட. அவள்தான் மறைந்துவிட்டாளே! வா.

சகா. அடே, சாருதத்தனிடம் சொல்லு. இந்த தாசி உன்னை பாத்திருக்கா. அவளை எங்கிட்டே விட்டுவிடு. இல்லாப்போனா கதவிடையே அகப்பட்ட விளாங்காய்போல மண்டையை உடைத்திடுவேன், தெரியுமா,

[விடனும் சகாரனும் சேடனும் போகிறார்கள்]

விதூ. அம்மா ரதனிகே. இதைச் சாருதத்தரிடம் சொல்லாதே.

ரதனி. ஐயா, நான் ரதனிகையன்றோ.

[வஸந்தஸேனை சாருதத்தன் சமீபம் போகிறாள்]

சாரு. ரதனிகே. சாயங்காலவேளை. ரோஹஸேனனை உள்ளே அழைத்துப்போ. குளிரும், இதைக்கொண்டுபோர்த்து. [அங்கவஸ்திரத்தை வஸந்தஸேனையிடம் கொடுக்கிறான்]

வஸந். [தனக்குள்] ஓஹோ! என்னை வேலைக்காரி என்று நினைக்கிறார் போலும் [அங்கவஸ்திரத்தை வாங்கி முகர்ந்து. தனக்குள்] என்ன உயர்ந்த ஜாதிப்பூ வாசனை. யௌவனம் வி[ட்டுப்] போகவில்லை. [அங்கவஸ்திரத்தைப் போர்த்திக் கொள்[ளு]கிறாள்]

சாரு. என்ன ரதனிகே. ரோஹஸேனனை உள்ளே அழைத்துப் போ என்றால்

வஸந். [தனக்குள்] இவ்விடத்தில் நுழையத்தகுதியற்றவளாயிற்றே நான்.

சாரு. ஹா! பதில்கூட காணோம். கஷ்டம். பணம்போனால் உற்றவேலையாட்கள்கூட சொன்னவேலை செய்வார்களா? ரதனிகே.

[விதூஷகனும் ரதனிகையும் சாருதத்தன் சமீபம் வருகிறார்கள்]

விதூ. ஐயா, ரதனிகை இதோ வருகிறாள்.

சாரு அப்படியா. இது யார் அறியாமல் செய்தது. என் வஸ்திரத்தால் தூஷிக்கப்பட்டு.

வஸந். [தனக்குள்] அல்ல பூஷிக்கப்பட்டு.

சாரு. [தனக்குள்] சரத்காலமேகத்தால் மறைக்கப்பட்ட சந்திரனைப்போல் விளங்கும் இது யார். சீ! அன்யஸ்திரீயைப் பார்க்கலாகாது. [திரும்பிக்கொள்ளுகிறான்]

விதூ. நண்ப. சந்தேகம் வேண்டாம். இது வஸந்தஸேனை.

சாரு. வஸந்தஸேனையா! [தனக்குள்] என் வீண் மனோராஜ்யம். அல்பனுடைய கோபம்போல் என்னையே வருத்தப்படுத்திக் கொள்ளவேண்டியதுதான்.

விதூ. ராஜா மைத்துனன் சகாரன் இவள் மூலமாய் உனக்கும் அவனுக்கும் ஜன்மப்பகையென்று சொல்லச்சொன்னான்.

சாரு. அவன் போகிறான் முட்டாள் [தனக்குள்] நான் வீட்டிற்குள்போகச் சொன்னதற்கு தன் நிலைமையை உணர்ந்து சும்மா இருந்துவிட்டாள். வார்த்தை சொல்லாமலே எவ்வளவு சங்கதி தெரிவிக்கிறாள்.

[பிரகாசம்] அம்மா தெரியாமல் வேலைக்காரி என்று நினைத்துச்சொன்னதை மன்னிக்கும்படி மிகவும் வேண்டுகிறேன்.

விதூ. போதும் உபசாரவார்த்தைகள்.

வஸந் [தனக்குள்] என்ன சாதுர்யமாய்ப் பேசுகிறார். சரி, நாம் இன்று இங்குதங்கலாகாது. (பிரகாசம்) ஆர்ய! தங்களுக் காக்ஷேபணையில்லையானால் இந்நகைகளை இங்கு வைத்துவிட்டுப்போகிறேன். இதை வேண்டித்தான் இத்துஷ்டர்கள் என்னைத் தொடருகிறார்கள்

சாரு இவ்வீடு இப்படிப்பட்ட பொருள்களைவைக்கத்தக்கதல்லவே.

வஸந். மனுஷ்யர்களை நம்பி சாமான்களை வைக்கிறோமே யொழிய வீட்டை நம்பியல்லவே

சாரு. மைத்திரேயா, அவற்றைப்பெற்றுக்கொள்.

[வஸந்தஸேனை நகைகளை விதூஷகனிடம் கொடுக்கிறாள்]

விதூ. அம்மா நீ க்ஷேமமாயிருப்பாயாக.

சாரு. ஸ்! மூடா. நம்மை வைத்திருக்கும்படிச் சொன்னதடா.

வஸந். ஆர்ய! இவரை என் வீடுமட்டும் துணையனுப்பக்கூடுமா?

சாரு. மைத்ரேயா, கூடப்போ.

விதூ. நீ போனால்தான் அழகாயிருக்கும் நான் போனால் என்னை பரிகாசம் செய்வார்கள்,

சாரு. சரி நானேபோகிறேன். யாரங்கே! தீவட்டி எடுத்துவா.

[சேடன் வருகிறான்]

சேட. [விதூஷகனிடம்] எண்ணெயில்லையே. தீவட்டி எப்படி கொண்டுவருவது.

விதூ. (சாருதத்தனிடம்) எண்ணெயில்லையாம்.

சாரு. வேண்டாம். சந்திரோதயமாய்விட்டது. வஸந்தஸேனே! வா போவோம்.

காக்ஷி. 3.

[வீதி. அதையடுத்து ஓர் பாழ்க்கோவில்]

[திரைக்குள்] "விடாதே" "விடாதே"

[சம்வாஹகன் பரபரப்புடன் ஓடிவருகிறான்]

சம்வா ஆ! ஹா! என்னைகழுதைபடாதபாடு படுத்திவைக்கிறார்களே. நான் யாரைச்சரணமடைவது. இருக்கட்டும். பின்புறமாய் நடந்து இப்பாழ்க்கோவிலுட் சென்று சிலையைப்போல் நின்றுவிடுகிறேன் [அப்படிச்செய்கிறான்]

[மாதுரனும் த்யூதகரனும் வருகிறார்கள்]

மாது அடே. பத்துபொன்னை தோர்த்துவிட்டு ஓடுகிறான் பிடியுங்கள்.

த்யூத எங்கே போனால் என்ன. விடுவோமா.

மாது [ஊஹித்துப்பார்த்து] அடே! பின்புறமாய்ப்போயிருக்கிறான். இந்தக்கோயிலிலே சிலைகிடையாதே. அவன் இங்கே தான் இருக்கவேண்டும்.

த்யூத வா. போய்ப்பார்ப்போம்.

[இருவரும் கோவிலிற்குள் நுழைகிறார்கள்].

த்யூத இதென்ன மரச்சிலையா.

மாது இல்லை. கற்சிலை. [சம்வாஹனை ஆட்டுகிறார்கள்] இருக்கட்டும் ஆடுவோம் வா. [சூதாடுகிறார்கள்]

சம்வா [தனக்குள்] யுத்தபேரிகை எப்படி ராஜ்யம் இழந்த அரசனை மனம் நோகும்படி செய்யுமோ அப்படி இவ்வாட்டமானது என்னைச் செய்கிறது.

த்யூத என் ஆட்டம். என்னுடையது.

சம்வா அல்ல. என்னுடையது.

த்யூத அகப்பட்டான் ஆசாமி.

மாது கொடடா. பத்துபொன்னை.

சம்வா இதோ தருகிறேன்.

மாது கொடு உடனே [இருவரும் சம்வாஹகனை அடிக்கிறார்கள்]

மாது நம் காய் ஆணைகொடு.

சம்வா மீற முடியாத ஆணையன்றோ வைத்துவிட்டான். நான் எங்கிருந்து கொடுப்பது.

மாது எப்படா கொடுப்பாய்.

சம்வா இரு [மாதுரனிடம் தனித்து] உனக்கு நான் பாதிகொடுக்கிறேன். பாதியை தள்ளிக்கொடு.

மாது ஆகட்டும்.

சம்வா. இரு. [த்யூதகாரனிடம்] ஐயா, பாதிதருகிறேன். பாதியை மன்னித்துவிடும்.

த்யூத. ஆகட்டும்.

சம்வா. ஐயா, தாங்கள் பாதி மன்னித்தீர்கள்.

மாது. ஆம்.

சம்வா. தாங்கள் பாதி மன்னித்தீர்கள்.

மாது. ஆம்.

சம்வா. ஆனால் நான் போகிறேன்.

மாது. எங்கே போகிறாய். 10 பொன்னை கொடுத்துவிட்டுப்போ.

சம்வா. பாருங்களய்யா பேருக்குப்பாதி மன்னித்துவிட்டு மறுபடியும் கேட்கிறார்கள்.

மாது. அடே! யாரென்று நினைத்துக்கொண்டாய். பணத்தைக் கொடுத்துவிட்டு அந்தண்டை போ.

சம்வா. நான் எங்கிருந்து கொடுப்பேன்.

மாது. ஒங்கப்பனை வித்துக்கொடு.

சம்வா. அப்பனில்லையே.

மாது ஆத்தாளை வித்துக்கொடு.

சம்வா ஆத்தாளுக்கெங்குபோவது.

மாது. உன்னை வித்துக்கொடு.

சம்வா. சரி ஐயா, என்னை யாராவது பத்துபொன்னுக்கு வாங்குகிறீர்களா? என்ன ஒருவரும் கேட்கவில்லையே. சாருதத்தர் பணமும் போச்சு. நம்மகதியும் இப்படியாச்சு.

மாது. கொடடா என்றால்.

சம்வா. எங்கிருந்து கொடுப்பேன்.

[மாதுரன் சம்வாஹகனை பிடித்திழுத்தடிக்கிறான்.]

(தாதுரன் வருகிறான்)

சம்வா. ஐயா சரணம், காப்பாற்றவேண்டும்.

தர்து. மாதுர, விஷயமென்ன.

மாது. இவன் 10 பொன் கொடுக்கவேணும்.

தர்து. இவ்வளவுதானா ஒரு வேளை சோத்துக்காசுகூட இல்லையே.

மாது. [தர்துரன்மேல் வேஷ்டியை எடுத்துப் பிரித்து அதிலிருக்கும் கிழிசலைக்காட்டி] ஐயா இந்த வேஷ்டி போட்டுக் கொண்டிருக்கும் இந்தப்பிரபுவிற்கு 10 பொன் ஒரு வேளை சோத்துக்காசு. கேட்டீர்களா?

தர்து. ஏனய்யா. பணத்தை எப்பொழுதும் கையிலேயே வைத்துக் கொண்டிருப்பார்களோ?

மாது. ஆமய்யா. அது உனக்கு ஒரு வேளை சோத்துக்காசு, ஆனால் எனக்கு அது சம்பத்து.

தர்து. அப்படியானல் நான் சொல்வதைக்கேள். இவனுக்
படியும் 10 பொன்கொடு. அவன் மறுபடியும் ஆடட்

மாது. ஆடினல்

தர்து. ஜயித்தால் கொடுத்துவிடுவான்.

மாது. ஜயிக்காவிட்டால்.

தர்து. கொடுக்கமாட்டான்.

மாது. நான் மாதுரன். நீயே கொடு. கேடுகெட்டபயலே.

தர்து. எவனடா கேடுகெட்ட பயல்.

மாது. நீதான்.

தர்து. உன் தகப்பன் கேடுகெட்ட பயல் [சம்வாஹகனை ஓடும்படி சைகை செய்கிறன்]

மாது. த பயலே. நீ கற்ற சூதாட்டநீதி இதுதானே.

தர்து. ஆம்.

மாது. சம்வாஹக. கொடடா 10 பொன்னை.

சம்வா. இதோ தருகிறேன்.

[மாதுரன் சம்வாகனை இழுக்கிறன்]

தர்து. அடே! என் முன்னலே நீ அவனை ஏதாவது செய்தால் [மாதுரன் சம்வாஹகன் முகத்தில் குத்துகிறன். ரத்தம் பெருக சம்வாஹகன் கீழே விழுகிறன். தந்துரன் நடுவில் வர, மாதுரனும் தந்துரனும் ஒருவரையொருவர் அடிக்கிறர்கள்]

மாது. அடே இரு. இரு. சொல்லுகிறேன்.

தர்து. அடே என்னை இன்று வீதியில் அடித்தாய் நாளை என்னை சதஸ்ஸில் அடி பார்ப்போம்.

மாது. நானும் பார்த்துக்கொள்ளுகிறேன்.

தர்து. எப்படிப்பார்ப்பாய்.

மாது. [விழிக்கிறன்] இப்படி.

[தர்துரன் மண்ணெடுத்து மாதுரன் கண்களில்போட மாதுரன் கண்களைப்பொத்திக் கொண்டு கீழே உட்காருகிறான். தர்துரன் சைகை செய்ய சம்வாஹகன் ஓடிவிடுகிறான்.]

தர்து. (தனக்குள்) சதஸ்ஸில் முக்கியனான மாதுரனை விரோதித்துக்கொண்டோம். இனி இங்கிருப்பது தவறு. ஆரியகர் ராஜாவாய் விடுவாரென்று சர்விளகன் சொன்னான். எல்லோரும் அவரையே போய்ச்சேருகிறார்கள். நாமும் அவரையே போய்ச்சேருவோம்.

காக்ஷி. 4.

[வஸந்தஸேனை வீட்டில் ஓர் அறை. வஸந்தஸேனை யோசித்தவண்ணம் வீற்றிருக்க மதனிகா அருகில் நிற்கிறாள்]

வஸந். பிறகு, பிறகு.

மதனி. அம்மா, "பிறகு பிறகு" என்கிறீர்களே. நான் ஒன்றும் சொல்லவில்லையே.

வஸந். நான் என்ன சொன்னேன்.

மதனி. "பிறகு பிறகு" என்றீர்.

வஸந். ஆ! ஹா! ஆம்.

(சேடன் வருகிறான்)

சேட. தங்களை ஸ்னானம் செய்து தேவி பூஜை செய்யும்படி அம்மா சொன்னார்கள்.

வஸந். அம்மாளிடம் நான் ஸ்னானம் செய்யவில்லையென்றும் வேதியரே பூஜை செய்யட்டுமென்றும் சொல்வாய்போ.

சேட. தங்கள் பிரியம் [போகிறான்]

மதனி. அம்மா நான் தங்களை கேட்பதற்காக கோபிக்கக்கூடாது. இதென்ன விஷயம் எனக்குச் சொல்லக்கூடாதா.

வஸந். என்னைப்பார்த்தால் உனக்கென்னமாய்த் தோன்றுகின்றது.

மதனி. யாரோ ஒருவர் பேரில்.
வஸந். நன்றாய் ஊஹித்தாய்.
மதனி. ஆம் யாரது? அரசனா! அல்லது ராஜஸதஸ்ஸிலுள்ள வேறு யாராவதா தங்களால் சேவிக்கப்படுவது.
வஸந். நான் சுகத்தைத் தேடுகிறேன். சேவிக்க விரும்பவில்லை.
மதனி. வேதாத்யயனம் செய்த தேஜஸ்வீ எந்த பிராமணயுவா அவர்.
வஸந். அப்படிப்பட்டவரை நாம் பூஜை செய்யவேண்டும்.
மதனி. அல்லது எந்த தனவந்தனான வைசியயுவா.
வஸந். ஆம் உற்றாரைப்பிரிந்து கேவலம் பொருள் நிமித்தம் ஊரூராய்த்திரிபவனையா.
மதனி. "இல்லை இல்லை" என்றால் யார்தான் அவர்.
வஸந். வஸந்தோத்ஸவத்திற்கு என்கூட வந்திருந்தாயா, அல்லவா.
மதனி. ஆம்.
வஸந். ஏன், ஒன்றுமறியாதவள்போலப் பேசுகிறாய்.
மதனி. தெரிந்துகொண்டேன். தங்கள் மனம் அவர்மேல் நாடிவிட்டது. அவர் மனம்?
வஸந். தெரிந்துகொண்டது உண்மையானால் அவர் பெயரென்ன?
மதனி. அவர் செட்டிதெருவிலிருக்கிறார்.
வஸந். அல்ல, பெயரைக்கேட்டால்
மதனி. சாருதத்தர்.
வஸந். ஆம், ஆம்.
மதனி. [தனக்குள்] கொஞ்சம் வேடிக்கை பார்ப்போம்.

[வஸந்தஸேனையிடம்] அவர்மிக ஏழை யென்று சொல்லுகிறார்களே.

வஸந். அதனால்தான் காதல். ஏழையை எண்ணின வேசியை யாரும் இகழார்.
மதனி. அம்மா பூவுதிர்ந்தமாவை வண்டுகளடையுமா.
வஸந். அதனால்தான் அவைகளை "மதுகரங்கள்" தேனுக்கலைபவைகள் என்று சொல்லுகிறார்கள்.

மதனி. ஆனால் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளுகிறதுதானே.

வஸந். அவசரப்பட்டால் மறுபடியும் காண்பதரிது.

மதனி. அதனால்தான் நகைகளை கொடுத்துவைத்தீரோ?

[சம்வாஹகன் ஓடிவந்து வஸந்தசேனைகாலில் வீழ்கிறான்]

சம்வா. அம்மா சரணம்.

வஸந். சரணமடைந்தோனுக்கபயம். தோழி, கதவை மூடு.

[மதனிகை கதவை மூடுகிறாள்.]

வஸந். யாரைக்கண்டு பயந்தீர்.

சம்வா. ஓர் சூதாடியைக்கண்டு.

வஸந். மதனிகே. கதவைத்திறந்துவிடு.

சம்வா. [தனக்குள்] இதென்ன! அபயம் கொடுத்தபிறகு நான் கவலைப்படுவானேன்.

மதனி. ஐயா! தாங்கள் யார்? எவ்விடமோ. யாரைச்சேர்ந்தவரோ. தொழில் என்ன. பயத்திற்கு காரணமென்ன.

சம்வா. நான் பாடலிபுரம். ஓர் கிருஹஸ்தன் குமாரன். தற்சமயம் ஓர் தனவந்தன் கிருஹத்தில் தேகம் பிடித்துவிடும்தொழில்.

வஸந். நல்ல வித்தையைக் கற்றீர்.

சம்வா. வித்தையாகக் கற்றேன். இப்பொழுது பிழைப்பாய் ஏற்பட்டது.

மதனி. பிறகு.

வஸந். இந்நகரின் மகிமையை கேள்விபட்டு இங்குவந்து ஓர் மகானை அண்டினேன். அம்மகாபுருஷனை என்னவென்று சொல்வேன். நல்ல அழகுடையவர். நல்ல வார்த்தையே சொல்பவர் மகாதானசீலர். பெருந்தன்மையால் தன் உடலையே பிறருக்களித்தவர். சரணமடைந்தோரைக் கைவிடார்.

மதனி. அது யார்? தங்கள் மனதிலுள்ளவருடைய குணங்களை களவுகொண்டு உஜ்ஜயினியில் வேறொருவர் இருக்கிறாரா?

வஸந். மதனிகே, நான் எண்ணினதை வெளியிட்டாய். பிறகு.

சம்வா. அம்மா, இப்பொழுது தன்கொடையால் அவர். ....

வஸந். எளிமையடைந்தாரா என்ன.

சம்வா. நான் சொல்லாமலே எப்படியறிந்தீர்.

வஸந். நற்குணமும் செல்வமும் கூடிவாழ்வதரிது. குடிக்கயோக்கியமில்லா குளங்களில் நீர் ஏராளமாயிருக்கும்.

மதனி. அவர் பெயர்.

சம்வா. யார்தான் அவரை அறியமாட்டார்கள். அவர் புண்யப் பெயர் சாருதத்தர்.

வஸந். [சந்தோஷத்துடன் எழுந்து] ஐயா, இவ்வீடு தம்முடையது. மதனிகே, இவருக்கு ஆசனமளி விசிரியை எடு. ய்கக் களைத்திருக்கிறார். [மதனிகை ஆசனமளித்து வீசுகிறாள்]

சம்வா. [தனக்குள்] என்ன ஆச்சரியம்! சாருதத்தருடைய பெயரைச்சொன்னமாத்திரத்திலேயே நமக்கு உபசாரம் பலமாய் நடக்கிறது. ஐயா, நீர் ஒருவர்தான் இவ்வுலகில் ஜீவித்திருக்கிறீர். மற்றவர்கள் உயிர்த்திருக்கிறார்கள். [பிரகாசம்] அம்மா, தாங்கள் உட்காரவேண்டும்.

வஸந். பிறகு.

சம்வா அவர் எனக்கு ஒரு பிழைப்பு ஏற்படுத்தி தன் வேலையாளாக என்னை வைத்துக்கொண்டார். அவருக்குப் பணக்குறைவு ஏற்பட்டவுடன் சூதாடிப்பிழைப்பவனானேன். 10 பொன் தோற்றேன்.

(மாதுரனும் த்யூதகரனும் வருகிறார்கள்)

மாது. ஏமாற்றிவிட்டான். ஏமாற்றிவிட்டான்.

சம்வா. இதோ இவர்களுக்குத்தான் தொகை செலுத்தவேண்டும். தங்கள் சித்தம்.

வஸந். மதனிகே. இதை அவர்களிடம்கொடு [தன் காப்பைக்கழற்றிக்கொடுக்கிறாள்]

மதனி. [மாதுரனிடம்] ஐயா, தங்களுக்குத்தானே பணம் செல்ல வேண்டும்.

மாது. ஆம். 10 பொன்.

மதனி. இவ்வளையல் அவருக்காக தேவி—அல்ல, அவரே அனுப்பினுர் [கொடுக்கிருள்]

மாது. அம்மா அந்தய்யாகிட்டச் சொல்லுங்கள். கடன் தீர்ந்தது, இனி ஆடவரலாமென்று. (மாதுரனும் த்யூதகரனும் போகிருர்கள்.]

மதனி. அம்மா, அவர்கள் போய்விட்டார்கள்.

வஸந். ஐயா, தாங்கள் தங்களுடைய ஜனங்களிடம் திரும்பிப்போகலாம்.

சம்வா. தேவி என்னைத்தங்களிடமே வேலையிலமர்த்திக்கொள்ளுங்கள்.

வஸந். ஐயா, தாமெவரிடமிருந்தீரோ அவரிடமே போயிருக்கலாம்

சம்வா. (தனக்குள்) நல்ல விடையளித்தாள். நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். (பிரகாசம்) தேவி, நான் சிரமண சன்யாசியாய் விடுகிறேன். சூதாடி சம்வாஹகன் சிரமண சங்யாசியானுன் என்பதை மறவாதீர் (போகிருன்)

காக்ஷி 5.

[சாருதத்தன் வீடு.]

[சாருதத்தனும் விதூஷகனும் உள்ளே தூங்குகிருர்கள் சர்விளகன் வருகிருன்]

சர்வி. அம்மட்டில் சுரங்கம் சுலபமாய் முடிந்தது. சந்திரனும் அஸ்தமித்துவிட்டான். நல்லது தான். நல்லவேளே, கன்னம் வைக்குமிடத்தில் மரங்கள் அடர்ந்திருந்தன.

நம்முடைய தொழில் தாழ்ந்ததென்றும், பிறர் தன்னறிவின்றி உறங்கும் சமயம் செய்யப்படுவதென்றும் கவலையற்றிருப்பவனை ஏமாற்றுதல் சூரத்தனமல்லவென்றும் உலகோர் பலவாறாய் இகழ்கிருர்கள். ஆனுல் இதில் சுதந்தர

முண்டு. கைகட்டிச்சேவகம் செய்யவேண்டியதில்லை. இது முன்பு நடந்ததுதானே. தர்மபுத்திரரது தூங்கும் சேனைகளை அசுவத்தாமா கொல்லவில்லையா.

இனி உள்ளே நுழையவேண்டும். எங்கே கன்னம் வைக்கலாம். இதுதான் சரியான இடம் வெய்யிலும் ஜலமும் பட்டு உப்படித்திருக்கிறது. எலிவங்குகளுமிருக்கின்றன. நம்முடைய வேலை கைகூடுமென்பதற்கு இதுவே நற்சகுனம்.

கன்னம் வைப்பதென்றால் இலேசா. சுட்ட கல்லாயிருந்தால் பெயர்க்கவேண்டும். பச்சைக்கல்லாயிருந்தால் ஊரவைத்து உதிர்க்கவேண்டும். காலையில் ஜனங்கள் பார்த்தால் "பேஷ், நல்லவேலைக்காரன்" என்று சொல்லும்படி நேர்த்தியாகவும் இருக்கவேண்டும்.

வரதரான சுப்பிரமணியருக்கும் கனகசக்தியாகிய வேதியர் தேவ விரதருக்கும் என்னைத்தலைமை சீடனாகக் கொண்ட யோகாச்சாரியாருக்கும் வந்தனம். என்குரு எனக்குக்கற்பித்த யோகவித்தையால் காவலாளிகள் என்னைப் பார்க்கவும் முடியாது. (சுவற்றை இடிக்க ஆரம்பிக்கிறான்) என்ன கஷ்டம் அளவு கயிற்றை மறந்தேனே. (யோசித்து) இதோ இப்பூணலே அளவு கயிராக உபயோகப்படும். பிராமணனுக்குப் பூணல் மிக உபயோகம். அதுவும் என்னைப் போலொத்தவர்களுக்கு.

சுவற்றில் கன்னவாதலை யளக்களாம். நகைகள் கழற்றலாம். கதவுகளிலிருக்கும் தாப்பாளைக்கழற்றலாம். விஷஜந்துக்கள் கடித்தால் கட்டுவதற்கு உபயோகப்படுகிறது.

(அளந்துபார்த்து இடிக்கிறான்) ஒரே கல்தான் பாக்கி ஆ! ஹா! தேள் கொட்டிவிட்டது.

(பூணலால் விரலைகட்டிவிடுகிருன்) இருக்கட்டும் (மறுபடியும் இடிக்கிருன்) வேலை முடிந்தது. நுழைவோம். இல்லை, பொய்த்தலையைவிட்டுப்பார்ப்போம். பேச்சுமூச்சுகாணேம். [நுழைந்து] இரண்டு புருஷர்கள் உறங்குகிருர்கள். முதலில் வெளியேறுவதற்காக கதவைத்திரப்போம். (கீல்களில் ஜலத்தை தெளித்து கதவைத்திறக்கிருன்) இவர்கள் தூக்கம் நிஜத்தூக்கம் தாஞ? (அதட்டிப்பேசுகிருன்) நிஜத்தூக்கம்தான். கண்கள் நன்ருய் மூடப்பட்டிருக்கின்றன. விழிகள் அசையவில்லை. அவயவங்கள் வெறப்பா யில்லாமல் தளர்ந்திருக்கின்றன. பொய்த்தூக்கமாயிருந்தால் கண்ணிற்கெதிரில் விளக்கு வெளிச்சத்தையும் பொறுக்கமாட்டார்கள்.

(சுற்றிப்பார்த்து) என்ன ஒரே வாத்தியங்களாகவைத்திருக்கின்றன. நாட்டியக்காரன் வீடா. அல்லது நம்மதிஷ்டம் ஏழை வீட்டில்தான் நுழைந்துவிட்டோமா? இருக்கட்டும் காயை உருட்டிப்பார்ப்போம் (உருட்டி) என்ன ஒரு பக்கத்திலும் அசையவில்லையே? ஓகோ வாஸ்தவத்திலேயே தரித்ரன்தான் போலிருக்கிறது. நாம் போகவேண்டியது தான்

விது. (தூக்கத்தில்) நண்ப, கன்னம், கள்ளன். இந்தச்சொர்ணபாத்திரத்தை வாங்கிக்கொள்.

சர்வி. நாம் நுழைந்ததையறிந்து தன் ஏழமையை யுக்தீதசித்து நம்மை பரிகாசம் செய்கிருஞ [உற்றுப்பார்த்து] இல்லை. வாஸ்தவம்தான். வாங்கிக்கொள்வோம். சீ! இவன் ஸ்திதியைப்பார்த்தால் நாம் இதைப்பெற்றுக்கொள்வது தவறு. போவோம்.

விது. நண்ப. உன்ஞணை இதை வாங்கிக்கொள். இல்லாவிட்டால் பிராமண சாபம் வரும்.

சர்வி. மீறமுடியா ஆணைவைத்துவிட்டானே. சீ! விளக்கெறிகிறது பூச்சியைவிட்டு விளக்கை யணைப்போம். [விளக்கையணைத்

துவிட்டு] இருட்டிவிட்டது. ஆம் நானும் உத்தம பிரா மணகுலத்திற்கு இருட்டைக் கொண்டுவந்துவிட்டேன், தாசி மதனிகையின்பொருட்டு பிருமணனை நான் இந்தக் கெட்டகாரியம் செய்கிறேன். இதைப்பெற்றுக்கொள்வோம் (கையை நீட்டுகிறுன்)

விது. உன் கை ஜில்லென்கிறதே.

சர்வி. என்ன தெரியாமை. தண்ணீ தொட்டதால் கைகுளிர்ந்திரு க்கிறது. (கையைத்துடைத்து தேய்த்துக்கொள்ளுகிறுன்)

விது. வாங்கிக்கொண்டாயா.

சர்வி: பிராமணன் வாக்கை மறுக்கலாகாது. வாங்கிக்கொண்டேன்.

விது. சரக்கெல்லாம் விற்றுன செட்டியைப்போல நன்றுய்த் தூங் கலாம்.

சர்வி. சுகமாய் நூறு வருஷம் தூங்கும். ஏதோ காலடிச்சப்தம் கேட்கிறது. ஆ! எனக்கும் பயமென்றென்றுண்டா, நானே நடையில் பூனே. ஓடுவதில்மான். பிடித்துக்கிழிப்பதில் பரு ந்து. தூக்கமறிவதில் நாய். சஞ்சரிப்பதில் பாம்பு. இருட் டில் விளக்கு. தரையில் குதிரை, ஜலத்தில் ஒடம், ஸ்திர மாயிருப்பதில் மலே. பலத்தில் சிங்கம்.

(ரதனிகை வருகிருள்)

ரதனி. வாசலில் உரங்கின சேடனேக்காணும். கதவு திறந்திருக் கிறது. கஷ்டம்! மைத்திரேயரைக் கூப்பிடுவோம்.

(சர்விளகன் போகிருன்.)

ரதனி. (பார்த்து பயந்து) ஐயோ! கள்ளன்! மைத்ரேயரே, எழுந்தி ரும், எழுந்திரும், கன்னம்வைத்து விட்டு கள்ளன் போய் விட்டான்.

விது. (எழுந்து) என்ன சொல்லுகிருய். நம் வீட்டில கள்ளனே வைத்துவிட்டு கன்னம் ஓடிவிட்டதா.

ரதனி. போதும் பரிகாசம், இதோ பாரும்.

விது. நண்ப, சாருதத்தா, எழுந்திரு எழுந்திரு. கள்ளன் கன்னம் வைத்துப்போய்விட்டான்.

சாரு. தோழா. போதும் பரிகாசம்.

விதூ. பரிகாசமல்ல, நீயே பார்.

சாரு எங்கே.

விதூ. இதோ.

சாரு. ஆ! என்ன அழகு! என்ன திறமை!

விதூ. தோழா ஒன்றில் அயலூரான் அல்லது கன்னம் வைக்கக் கற்றுக்கொள்பவனுயிருக்கவேண்டும். உஜ்ஜயினில் நம்வீட்டு சம்பத்தறியாதவன் யாரிருக்கிறுன்.

சாரு. வீணில் சிரமப்பட்டு ஆசையிழந்தவனுய்ப் போயிருப்பான். தன் சிநேகிதர்களிடம் என்னை இகழ்வானே.

விதூ. என்ன தோழா திருட்டுப்பயலுக்கு இறங்குகிறுயே. அவன் நினைத்திருப்பான் "இந்த வீடுபார்க்கப் பெரிதாயிருக்கிறது. இங்கே ரத்னங்கள் தங்கப்பாத்திரங்கள் அகப்படும் கொண்டு போகலாம்" என்று. (யோசித்து வருத்தத்துடன்) அந்தத் தங்கப்பாத்திரம் எங்கே. உம்.........(சந்தோஷத்துடன் நண்ப. நீ எப்பொழுதும் "மைத்ரேயன் முட்டாள், அசடு' என்று சொல்வாயே. இப்பொழுது பார்த்தாயா. அந்தப் பாத்திரத்தை அப்பொழுதே உன்னிடம் கொடுத்தது நன் ருய்ப்போய்விட்டது. இல்லாவிட்டால் அந்தப்பயல் திருடிக்கொண்டேபோயிருப்பான்.

சாரு. தோழா, போதும் பரிகாசம்.

விதூ. நான் என்ன முட்டாளா? பரிகாசத்திற்கு சந்தர்ப்பம் தெரியாதா.

சாரு. எப்பொழுது கொடுத்தாய்

விதூ. உன் கை ஜில்லென்கிறது என்று நான் சொன்னேனல்லவா அப்பொழுது.

சாரு. ஒருவேளையப்படியுமிருக்குமா [சந்தோஷத்துடன்] தோழா நம்மதிஷ்டமே அதிருஷ்டம். நல்ல சமாசாரம் தெரியவருகிறது.

விதூ. என்ன, திருட்டுப்போகவில்லையா?

சாரு. போய்விட்டது.

விதூ. ஆனால் அதில் என்ன சந்தோஷம்.

சாரு திருடன் முயற்சி வீணாகவில்லை என்று.

விதூ. அது நம்மை நம்பிவைக்கப்பட்டதாயிற்றே.

சாரு. ஹா! (மூர்ச்சையாகிறான்)

ரதனி நான் போய் தூதாம்பாளிடம் தெரிவிக்கின்றேன் [போகிறாள்.]

விதூ. நண்ப, தோழா, [மூர்ச்சையைத் தெளியச்செய்கிறான்] எழுந்திரு. அதைத்திருடன் கொண்டுபோனால் நீ என் மூர்ச்சையாகிறாய்.

சாரு. [எழுந்து] நண்ப உண்மையாய் நடந்ததை எவன் நம்புவான். எல்லோரும் என்னை இகழ்வார்கள். ஒளியை அழிக்கும் எளிமை எல்லாச்சந்தேகங்களுக்கும் இடம் கொடுக்குமல்லவா. யமன் என் சொத்தை யபகரித்ததுமாத்திரமல்ல. என் நற்பெயரையுமபகரித்தான்.

விதூ. நான் சொல்லுகிறேன். யார் கொடுத்தது? யார்வாங்கினது? இதற்கு யார் சாக்ஷி.

சாரு. நானா பொய் சொல்வேன். பிச்சையெடுத்தாவது நம்மை நம்பிக்கொடுத்தபொருளை திருப்பிக்கொடுப்பேனேயொழிய பெயரையழிக்கும் பொய்யை ஒருநாளும் சொல்லேன்.

[தூதாவும் ரதனிகையும் வருகிறார்கள்]

தூதா. (பரபரப்புடன்) ரதனிகே, அவருக்கு ஒருகேடும் ஏற்படவில்லையே? மைத்ரேயர் எப்படியிருக்கிறார்.

ரதனி. அம்மணி! எக்கேடுமில்லை. ஆனால் அத்தாதியின் நகைகள் போய்விட்டன.

(தூதா மூர்ச்சையாக ரதனிகா தெளிவிக்கிறாள்)

தூதா. என்ன சொன்னாய்? அவர் தேகத்திற்கு ஒன்றுமில்லையென்று? அவர்பெயர் கெடுவதைவிட அவர் தேகத்திற்கு நேர்ந்திருக்கலாம். சாருதத்தர் தன்னுடைய எளிமையால்

இப்படிப்பட்ட காரியம் செய்தாரென்றல்லவோ சொல்வார்கள். ஏ விதியே! தாமரையிலையில் வீழ்ந்த ஜலத்துளியைப் போல என் தத்தளிக்கவிடுகிறாய். (யோசித்து) இதோ என் தாயார் வீட்டில் கொடுத்த ரத்னமாலை யொன்றுதானிருக்கிறது. இதைப்பெற்றுக்கொள்ளும்படி எவ்வளவோ தடவைகள் வேண்டியும் ஆர்யர் மறுக்கிறார். மைத்ரேயரிடமாவது சொல்வோம். மைத்ரேயரே, வந்தனம்.

விதூ. ஸர்வமங்களானிபவந்து.

தூதா. ஐயா இதை வாங்கிக்கொள்ளும்.

விதூ. ஏது இது?

தூதா. ஐயா, நான் ரத்னஷஷ்டிவிருதம் எடுத்திருந்தேன் அதற்குத் தன்னாலியன்றமட்டும் ரத்னங்கள் பிராமணனுக்கு தானம் கொடுக்கவேண்டும். அது தவறிவிட்டது. இப்பொழுது இவ்விரத்னமாலைதானிருக்கின்றது. இதைப்பெற்றுக்கொள்ளும்.

விதூ. தீர்க்கசுமங்கலீபவ. போய் நமது நண்பனிடம் தெரிவிக்கிறேன்.

தூதா. நான் வெட்கப்படும்படி செய்யாதீர் (போகிறாள்)

சாரு. மைத்ரேயா.

விதூ. இதோ இதைப்பெற்றுக்கொள் [ரத்னஹாரத்தை கொடுக்கிறான்]

சாரு. இதேது.

விதூ. நல்ல பத்னியை அடைந்ததின் பயன்.

சாரு. ஹா! நான் வாஸ்தவத்தில் இப்பொழுதுதான் தரித்ரனானேன்.

எந்த புருஷன் தன்னுடைய துரதிருஷ்டத்தினால் இரக்கம் கொண்ட பெண்சாதியால் சொத்துக்கொடுக்கப்படுகிறானோ அவன் உண்மையில்பெண். அப்பெண்வாஸ்தவத்தில் புருஷத்தன்மையடைந்தவள். நான் ஏன் வருந்தவேண்டும்.

என் பாக்கியத்தையே தன் பாக்கியமென்றுகொள்ளும் மனைவியும், என் சுகதுக்கத்தை தன்னுடையதாகபாவிக்கும் நண்பனும், குறைவில்லா சத்தியமும் இருக்குமளவும் எனக்கு ஏதுகுறை. மைத்ரேயா, நீ வஸந்தஸேனையிடம்போய் அந்நகைகளை நான் என்னுடையதாக பாவித்து சூதாடி தோற்றுவிட்டேனென்றும் அதற்குப்பதிலாகஇவ்ரத்னமாலையை, வைத்துக்கொள்ளும்படி சொன்னேனென்றும் சொல்போ.

விதூ. திருடன்கொண்டுபோய் நாம் ஒரு பிரயோஜனமும் அடையாத அச்சிறு நகைகளுக்காகவா இவ்விலையில்லா ஹாரத்தைக் கொடுப்பது.

சாரு. அப்படியல்ல, நம்மை நம்பிக்கொடுத்தாளே. அந்த நம்பிக்கைக்காகத்தான் இதுகொடுக்கப்படுகிறது. இதைக்கட்டாயம் அவளிடம் கொடுக்கவேண்டும். சேடா இக்கன்னவாயிலை யடைத்துவிடு. இங்கு களவு நடந்ததாக ஒருவருக்கும் தெரியக்கூடாது. மைத்ரேயா, உன்பெருந் தன்மையை காண்பி, போ.

காக்ஷி. 6.

[வஸந்தஸேனை வீட்டில் ஓர் அறை. வஸந்தஸேனை ஓர் சித்திரப்பலகையை உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கிறாள். மதனிகை பக்கத்தில் நிற்கிறாள்]

வஸந். மதனிகே, இச்சித்திரம் சாருதத்தருடைய உருவத்தையொத்திருக்கிறதா?

மதனி. நன்றாய் ஒத்திருக்கிறது.

வஸந். நீ எப்படியறிவாய்?

மதனி. தங்கள் கண்கள் அதிலேயே ஆழ்ந்திருக்கவில்லையா. கண்கள் மாத்திரமல்ல. மனம்கூட ஆழ்ந்திருக்கக்காரணம் கேட்கவும் வேண்டுமா ?

(சேடன் வருகிறான்)

சேட. அம்மா! மூடுவண்டி தயாராயிருப்பதாகவும் தங்களைப் புறப்படும்படிக்கும் தாயார் சொன்னார்கள்.

வஸந். சரி. சாருதத்தரா என்னையழைத்துப்போகிறார்?

சேட. வண்டியுடன் 10000 பொன் பெறக்கூடிய நகைகள் வந்திருக்கின்றன.

வஸந். யார் அனுப்பியது?

சேட. ராஜா மைத்துனன்.

வஸந். [கோபத்துடன்] போ என்முன் இனி இப்படிப்பேசாதே.

சேட. என்னைக்கோபிக்கவேண்டாம். தங்கள் தாயார் சொன்னதைச் சொன்னேன்.

வஸந். நான் அச்சொல்லுக்குத்தான் கோபித்தேன்.

சேட. தாயாரிடம் என்ன சொல்வது.

வஸந். நான் உயிர்தரித்திருக்க வேண்டுமென்றவளுக் கபிப்பிராயம் இருந்தால் இனி இம்மாதிரி சொல்லியனுப்ப வேண்டாமென்று சொல்.

சேட. உத்திரவுப்படி. (போகிறான்)

[சர்விளகன் வருகிறான்.]

வஸந். (மதனிகையிடம் சித்திரத்தைக்கொடுத்து) சகி, இதை என் பள்ளியறையில் வைத்துவிட்டு விசிறியை எடுத்துவா.

[மதனிகை வருகிறாள்.]

சர்வி. மதனிகே.

மத. ஆ! சர்விளகரா. எங்குவந்தீர். சௌக்கியமா.

சர்வி. சொல்லுகிறேன் (காதலுடன் ஒருவரையொருவர் பார்க்கிறார்கள்.)

வஸந். ஏன் மதனிகை யின்னம் வரவில்லை [எட்டிப்பார்த்து] ஓ! ஹோ! யாருடனோ பேசிக்கொண்டிருக்கிறாள். அவர்களைப் பார்த்தால் காதலிப்பவர்கள்போல் தோன்றுகின்றது. அவளைக்கூப்பிட்டு ஏன் அவர்கள் சுகத்தைக்கெடுக்கவேண்டும்.

சர்வி. [பயத்துடன் சுற்றும் பார்க்கிறான்]

மதனி. ஏன் பயப்படுகிறாய்.

சர்வி. இங்கொருவருமில்லையே. உன்னிடம் ஓர் ரகசியம் சொல்ல வேண்டும்.

மதனி. என்ன அது.

வஸந். அதென்ன அவ்வளவு ரகசியமாயிருந்தால் நான் கேட்க லாகாது.

சர்வி. உன்னை வஸந்தஸேனை பொருளின்றி விடுவிப்பாளோ.

வஸந். என்னைப்பற்றின சமாசாரம்போலிருக்கிறது கேட்போம் (மறைந்து நின்று கேட்கிறாள்)

மத. அம்மா சொன்னாள் "மதனிகே, எல்லாம் என் வசமானால் என் பரிவாரங்களை யெல்லாம் விடுத்துவிடுவேன்" என்று. அதுவெங்கே இப்பொழுது. அவ்வளவுக்குத் தங்களிடம் பணம் ஏது.

சர்வி. இரவில் ஓர் சாகசக்காரியம் செய்தேன்.

மத. என் பொருட்டு இரண்டையும் அபாயப்படுத்தினீரா என்ன.

சர்வி. எவ்விரண்டு.

மத. சரீரம், நன்னடத்தை.

சர்வி. சாகசமில்லாது ஐசுவரியம் ஏது.

மத. மாசில்லாத்தம் நடத்தை என்பொருட்டுக் கெடுவானேன்.

சர்வி. புஷ்பக்கொடிபோன்ற ஸ்திரீயின் பூஷணங்களையும் யாகத் திற்கென்று சேர்த்தபொருளையும் குழந்தைகள் அணிந்திரு ப்பதையும் அபகரியேன். திருட்டிலும் தர்மா தர்மங்களை மறவேன்.

வஸந்தசேனையிடம்போய் அவளுக்கே அளவாய் செய் ததுபோலுள்ள இந்த நகைகளை உன் சிநேகத்திற்கோர் அடையாளமாய் அணியச்சொல்.

மத. எங்கே! அவைகளைப்பார்ப்போம்.

சர்வி. (பயத்துடன்) இதோ.

மத. இது நான் முன் பார்த்ததுபோலிருக்கிறது இது எங்கிருந்தது சொல்.

சர்வி. அதுவேன் உனக்கு. எடுத்துச்செல்.

மத. என்னிடம் நம்பிக்கையில்லாவிட்டால் என்னை ஏன் மீட்கவேண்டும்.

சர்வி. இன்றுகாலே செட்டித்தெருவில் சாருதத்தர் .... [வஸந்தஸேனையும் மதனிகையும் மூர்ச்சையாகிறார்கள்]

சர்வி. மதனிகே! இதென்ன. எழுந்திரு [மதனிகையை தெளிவிக்கிறான்.]

மத. அங்கே ஒருவருக்கும் ஒரு கெடுதியுமில்லேயே. (வஸந்தஸேனை மூர்ச்சைதெளிகிறாள்)

சர்வி. அங்கே ஒருவருக்கும் ஒரு கேடும் இல்லே.

மத. இது சத்தியமா ?

சர்வி. சத்தியம்.

மதனி. நல்லவேளே.

சர்வி. மதனிகே! என்ன நல்லவேளே! உன் பொருட்டு என் பெயரைக் கெடுத்துக்கொண்டு நான் இவ்வேலே செய்ய நீ யாரையோ.........ஸ்திரீகளிடத்திலும் லக்ஷ்மியிடத்திலும் நம்பிக்கைவைக்கலாகாது. இவர்கள் பணத்தின்பொருட்டுசிரிப்பார்கள், அழுவார்கள், நம்பச்செய்வார்கள், ஆனல் நம்பார்கள். இவர்களேச் சுடுகாட்டுப் புஷ்பங்கள்போலக் கருதிவிலகிப் போகவேண்டும்.

அடே! சாருதத்தா! இதோபார்! (புறப்படுகிறான்)

மத. (தடுத்து) என்ன பிதற்றுகிறாய். இந்த நகை அம்மாளுடையது.

சர்வி. ஆனல் என்ன.

மத. அம்மாள் அவரிடம் கொடுத்தார்கள்.

சர்வி. எதற்காக (மதனிகை காதில் சொல்லுகிறாள்)

சர்வி. என்ன கஷ்டம்! நிழலுக்காக எம்மரத்தை நாடினேனே அதன் கிளேகளே நானே வெட்டி விட்டேனே.

வஸந். இவன் வருந்துவதைப் பார்த்தால் தெரியாமல் செய்திருக்கிறனென்று தோன்றுகின்றது.

சர்வி. மதனிகே! இப்பொழுது என்ன செய்வது.

மத. நீதான் சொல்லேன்.

சர்வி. அப்படியல்ல. ஸ்திரீகளுக்கு அறிவு இயற்கையாய் ஏற்படுகிறது. புருஷர்களுக்குப் பயிற்சியால் ஏற்படுகிறது.

மதனி. நான் சொன்னபடி செய்கீறீரா. அம்மஹானுபாவரிடமே இதைச்சேர்ப்பிக்கவேண்டும்.

சர்வி. மதனிகே! அவர் அதிகாரிகளிடம் தெரிவித்தால்.

மதனி. சந்திரனிடமிருந்து வெய்யில் புறப்பட்டால்.

வஸந். மதனிகே! மெச்சினேன்.

சர்வி. மதனிகே இது முடியாது. வேருபாயம் சொல்.

மதனி. சாருதத்தர் மனுஷியனுகவே இதை அம்மாளிடமே சேர்த்துவிடும்.

சர்வி. அப்படிச்செய்தால் ....

மதனி. நீர் திருடனுகமாட்டீர். சாருதத்தர் கடன்தீரும். அம்மாள் சொத்து அம்மாளைக்சேரும்.

சர்வி. இது வெகு துணிவல்லவா.

வஸந். மதனிகே, நல்லயோசனை சொன்னுய்.

மத. நீர் இங்கிரும். நான் அம்மாளிடம் தெரிவிக்கிறேன்.

சர்வி. சரி.

மதனி. (வஸந்தஸேனையிடம் போய்) அம்மா சாருதத்தரிடமிருந்து ஒரு பிராமணர் வந்திருக்கிருர்.

வஸந். அவர் மனுஷியனென்று எப்படித்தெரியும்.

மதனி. என் சம்பந்தியை எனக்குத்தெரியாதா?

வஸந் (தலைகுலுக்கி தனக்குள்) சரிதான் [பிரகாசம்] வரச்சொல்.

(சர்விளகன் வஸந்தஸேனை சமீபம் போகிறுன்)

சர்வி. தங்களுக்கு மங்களம் உண்டாகுக.

வஸந். வாருங்கள் உட்காருங்கள்.

சர்வி. சாருதத்தர் தன்வீடு பழய வீடானபடியால் இதைக்காப் பாற்றுவது கஷ்டமென்றும் திரும்பி வாங்கிக்கொள்ளும் படிக்கும் சொன்னார்.

(நகைகளை மதனிகையிடம் கொடுக்கிறான். புறப்படுகிறான்)

வஸந். ஐயா, தாங்கள் என்பதிலேயும் அவரிடம் சொல்லவேண்டும்

சர்வி. (தனக்குள்) அங்கே யார்போவது! [பிரகாசம்] என்ன வென்று.

வஸந். மதனிகையைக்கேளுங்கள்.

சர்வி. எனக்குப்புலப்படவில்லையே.

வஸந். புலப்படவில்லையா ?

சர்வி. இல்லை.

வஸந். நான் தெரிந்துகொண்டேன்.

சர்வி. என்னவென்று.

வஸந். எவன் இந்த நகைகளைக்கொண்டுவருகிறானோ அவனுக்கு மதனிகையை கொடுக்கும்படி சாருதத்தர் சொல்லியிருந் தார். ஆகையால் மதனிகையைத் தங்களுக்கே கொடுக்க விரும்புகிறாரென்றறிந்தேன்.

சர்வி. (தனக்குள்) நம்மைக்கண்டுகொண்டாள் போலும் [பிரகா சம்] நல்லது சாருதத்தரே நல்லது. உம்முடைய குணமே குணம்.

வஸந். வண்டிக்காரா

[வண்டிக்காரன் வருகிறான்]

வஸந். அடி, மதனிகே, என்னைப்பார். உன்னை நான் கொடுத்தேன். வண்டியில் ஏறு. என்னை மறவாதே.

மத. அம்மா, என்னைக்கைவிட்டீர்கள் (அழுதுகொண்டு வஸந்த ஸேனைக்காலில் வீழ்கிறாள்)

வஸந். மதனிகே, எழுந்திரு. இப்பொழுது நீ நான் பணியக்கூடிய வளாய்விட்டாய். போ வண்டியில் ஏறு. என்னை மறவாதே.

[சர்விளகனும் மதனிகையும் போகிறார்கள்]

[ஓர் சேடன் வருகிறான்]

சேட. அம்மா, சந்தோஷ சமாசாரம். சாருதத்தரிடமிருந்து ஓர் பிராமணர் வந்திருக்கிறார்.

வஸந். ஆ! அப்படியா இன்று நாம் விழித்த வேளை. அவருக்கு தக்கமரியாதைபண்ணி அழைத்துவா.

சேட. உத்தரவு (போகிறான்)

[சேடன் விதூஷகன் வருகிறார்கள்]

(வஸந்தஸேனை ஆசனமளித்து வணங்குகிறாள்)

விதூ. ஸமஸ்தமங்களாணிபவந்து.

வஸந். க்ஷேமமா? வீற்றிருங்கள் இதோ ஆசனம்

விதூ. தாங்களும் உட்காரவேண்டும் (இருவரும்உட்காருகிறார்கள்)

வஸந். சாருதத்தர் சவுக்கியமா?

விதூ. ஆம் சவுக்கியம்.

வஸந். குணமென்ற தளிர்களோடும் கல்வியாகிய கிளைகளோடும் நம்பிக்கையென்ற வேரோடும் பிறராதிரவென்ற புஷ்பங்களோடும் குணங்களாகிய பழங்களோடும் கூடின அச்சாதுவாகிய விருக்ஷத்தைச் சிநேகிதர்களாகிய பக்ஷிகள் அடைகின்றனவா.

விதூ. [தனக்குள்] இவ்வேசி என்ன பேச்சு பேசுகிறாள் (பிரகாசம்) ஆம்.

வஸந். தாங்கள் இங்கே எழுந்தருளியது ....

விதூ. சாருதத்தர் வந்தன பூர்வம் தெரிவிக்க ....

வஸந். (கைகூப்பி) என்ன கட்டளையிட்டார்.

விதூ. அந்த ரத்னங்களை என்னுடையதாகப் பாவித்து சூதாடித் தோற்றேன். அதை ஜயித்தவன் எங்குபோனான் என்று தெரியவில்லை.

சேட. அம்மா, என்ன பாக்கியம்! அவர் சூதாடியாம்.

வஸந். (தனக்குள்) என்ன பெருந்தன்மை. திருடன் கொண்டு போனதை சூதாட்டத்தில் தோற்றதாகச் சொல்லுகிறாரே. அதனால்தான் அவரைக்காதலிக்கிறேன்.

விதூ. அதனால் அந்நகைகளுக்குப்பதிலாக இவ்விரத்னஹாரத்தை ப்பெற்றுக்கொள்ளவேண்டும்.

வஸந். (தனக்குள்) அந்நகைகளைக் காட்டவா. இருக்கட்டும்.

விதூ. அம்மா! ஏன் இதைப்பெற்றுக் கொள்ளமாட்டேன் என் கிறீர்கள்.

வஸந். [சிரித்து சேடனைப்பார்த்து] நானு பெற்றுக்கொள்ளமாட் டேன் [வாங்கி தன்னருகில் வைத்துக்கொள்ளுகிறாள் தன க்குள்] என்ன ஆச்சர்யம். பூவுதிர்ந்த ஒட்டுமாவினின்றும் தேன் சொட்டுகின்றதே. (பிரகாசம்) ஐயா, அச்சூதாடி சாருதத்தரிடம் நான் சாயங்காலம் பார்க்கவருவதாகச் சொல்லும்.

விதூ. (தனக்குள்) என்ன! இது போதாதென்று இன்னம் வேறெ தாவது அபஹரித்துக் கொள்ளலாமென் றெண்ணுகிறாளா. இந்த வேசி சங்கதியை இத்துடன் நிறுத்திக்கொள்ளும்படி என் நண்பனிடம் சொல்லிவிடுகிறேன். (போகிறான்)

காக்ஷி. 7

[சாருதத்தன் வீட்டுத்தோட்டம்]

சாரு. வஸந்தஸேனையிடம் போன மைத்ரேயன் ஏன் இன்னும் வரவில்லை.

விதூ. (பிரவேசித்து) என்ன அந்த வேசியின் துராசை! கொஞ்ச மாவது மரியாதையில்லை! ஒருவார்த்தையும் சொல்லாமல் அந்த ரத்னஹாரத்தை வாங்கிக்கொண்டாளே. இவ்வளவு சம்பத்திருந்தென்ன! "ஐயா, மைத்ரேயரே, உட்காரும், கொஞ்சம் சிரமப்பரிகாரம் செய்துகொள்ளும், கொஞ்சம் பழம் சாப்பிடும், கொஞ்சம் மோர் தீர்த்தம் சாப்பிடும்"

என்று சொன்னுளா? சீ! இனிமேல் நான் அவள் முகத்தையும் பாரேன். நன்ருய்ச்சொன்ஞர்கள் "கிழங்கில்லாத்தாமரை, வஞ்சனையில்லாச்செட்டி, திருடாத்தட்டான், சண்டையில்லா கிருமப்பஞ்சாயத்து, ஆசையில்லாவேசி, இவைகள் துர்லபமென்று". நாம்போய் நம்தோழனை இந்த வியாபாரத்திலிருந்து திருப்பவேண்டும். சாருதத்தன் உத்யானத்திலிருக்கின்ருன். நண்ப, உனக்கு மங்களமுண்டாகுக.

சாரு. மைத்ரேயா க்ஷேமமா. உட்காருவாய்.

விது. உட்கார்ந்துதானிருக்கிறேன்.

சாரு. போனசங்கதி என்ன, சொல்.

விது. அந்தக்காரியம் நஷ்டம்தான்.

சாரு. ரத்னஹாரத்தையவள் பெற்றுக்கொள்ளவில்லையா?

விது. நமக்கேது அவ்வளவு அதிருஷ்டம். தன்னழகிய கையை தலையில்கூப்பிப் பெற்றுக்கொண்டாள்.

சாரு ஆனல் ஏன் நஷ்டமென்ருய்.

விது. ஏன் நஷ்டமா? நாம் எடுத்துக்கொள்ளாமலே திருடன் கொண்டுபோன அந்த அல்ப நகைகளுக்காக இநத விலையுயர்ந்த ரத்னஹாரத்தைக் கொடுப்பதா?

சாரு. தோழா, அப்படியல்ல, நம்மை நம்பி நம்மிடம்வைத்தாளே, அந்த நம்பிக்கைகாகத்தான் கொடுத்தோம்.

விது. தோழா, எனக்கு ஒரு விஷயத்தில் வருத்தம். என்னைப் பார்த்து மறைவாய் சிரித்தாள். நான் பிராமணன். உன் காலில்வீழ்ந்து வேண்டுகிறேன். இந்த வேசி வியாபாரத்தையொழி. வேசி செருப்புக்குள்புகுநத கல்லைப்போல வெளியேற்றுவது சிரமம். மேலும் எங்கே வேசி, யானை, பிச்சைக்காரன், போக்கிரி, கழுதை, இவைகள் இருக்கின்றனவோ அங்கே துஷ்டர்கள்கூட இருக்கமாட்டார்கள்.

சாரு தோழா, நிந்தனைபோதும், என் ஸ்திதியே என்னைத்தடுக்கின்றது. குதிரைக்கு மனேவேகமிருந்தபொழுதிலும் பலக்குறைவால் அடியெடுத்துவைக்கமுடியவில்லை. மனுஷியனு

டைய சஞ்சலமான எண்ணங்கள் எங்கும் பரவுகின்றன. ஆனல் சிரமத்தையடைந்து மறுபடியும் தன்னையே திரும்பி யடைகின்றன. மேலும் அவள் தனிகளை நாடுகின்றவளன் ரோ? (தனக்குள்) குணவானைத்தான் நாடுவாள் (பிரகாசம்) நம்மிடம் பணமேது. நாம் அவளை நினைக்கவேயில்லையே.

விது. [தனக்குள்] நாம் சொல்லச்சொல்ல அதிகமாகிறது. சும் மாவா சொன்னன் "வாம: காம:" என்று. பிரகாசம்) பின் னும் அவள் இங்கே சாயங்காலம் வருவதாகச் சொன்னள். அந்த ரத்னஹாரம் போதாதென்று வேறு ஏதாவது கேட்க வருகிருளென்று நினைக்கிறேன்.

சாரு. வரட்டும். தோழா, திருப்திபண்ணி யனுப்புவோம்.

(சேடன் வருகிருன்)

சேட. வஸந்தஸேனை வருவதை சாருதத்தரிடம் தெரிவிக்கவேண் டும். [சமீபம் வந்து] சாருதத்தரும் மைத்ரேயருமிருக்கி ருர்கள். கதவு சாத்தியிருக்கிறது. இருக்கட்டும் அடையா ளம் காண்பிப்போம் (பொடிக்கல்லை எறிகிருன்)

விது. அடே! யாரது? விளாம்பழமடிப்பதுபோல் என்னை யடிக் கிறது.

சாரு. ஒருவேளை புருக்கள் தள்ளியிருக்கலாம்.

விது. அடே! துஷ்டப்புருவே இரு. இதோ! ஒரே அடியில் உன் னைக்கொன்றுவிடுகிறேன். (எழுந்திருக்கிருன்)

சாரு. [தடுத்து] தோழா, இரு. என் அந்தப்புருவைத் தொந்தரவு செய்யவேண்டும். தன் பேடையுடன் சுகமாயிருக்கட்டும்.

சேட. என்ன, நம்மை இன்னும் தெரிந்துகொள்ளவில்லை. இன்னும் ஒரு கல்விடுவோம்.

விது. [சுற்றிப்பார்த்து] யார்? கும்பீலகனு வா.

சேட. ஐயா, நமஸ்காரம்.

விது. இந்த இருட்டிலும் மழையிலும் எங்கே வந்தாய்.

சேட. அவள் தான்.

விது. யாரது.

சேட. அவள் தான்.

விது. என்ன வரட்டுத்தவளைபோல் கத்துகிருய். சொல்லேன் யாரென்று.

சேட. (தனக்குள்) கொஞ்சம் வேடிக்கை பண்ணுவோம். (விதூஷகனிடம்) ஒரு கேள்வி கேட்கிறேன்.

விது. உன்னை ஒரு உதை விடுகிறேன்.

சேட. எக்காலத்தில் மா புஷ்பிக்கின்றது.

விது. அடே! மழைகாலத்தில்

சேட. [சிரித்து] இல்லே. இல்லே.

விது. (சாருதத்தனைக்கேட்டு) வஸந்தகாலத்தில்

சேட. இன்னொரு கேள்வி. கோட்டையை காப்பதெது?

விது. சப்பாத்திக்கள்ளி.

சேட. இல்லே, இல்லே.

விது. [மறுபடியும் சாருதத்தனைக்கேட்டு] ஸேனை.

சேட. இரண்டையும் சேர்த்துச்சொல்.

விது. ஸேனை வஸந்தம்.

சேட. திருப்பிச்சொல்.

விது [உடலைத்திருப்பி] ஸேனுவஸந்தம்.

சேட. பதங்களைச் திருப்பிச்சொல்.

விது. [கால்களை மாற்றிவைத்து] ஸேனுவஸந்தம்.

சேட. சொற்களை மாற்றிச்சொல்.

விது. வஸந்தஸேனை.

சேட. அப்பா! அவள்தான் வந்திருக்கிருள்.

விது. ஆனல் சாருதத்தரிடம் சொல்வோம் [சாருதத்தனிடம்] தோழா, உன் பணக்காரி வந்திருக்கிருள்.

சாரு. நம்குலத்திலேயே பணக்காரன் கிடையாதே.

விது. குலத்திலில்லாதபோனல் வாசலிலிருக்கிருள்.

சாரு என்ன விளையாடுகிருய்.

விது. நான் சொல்வது பொய்யானல் கும்பீலகனைக்கேள்.

சேட. ஐயா, வந்தனம்.

சாரு. ஐயா, வாரும், சௌக்கியமா? வாஸ்தவத்தில் வஸந்தஸேனை வந்திருக்கிறளா?

சேட. ஆம்.

சாரு. [சந்தோஷத்துடன்] ஒருபொழுதும் நல்லவாக்குச் சொன்னவர்களை சும்மாபோகச்சொன்னதில்லை. இதை வைத்துக் கொள் [ஒருவஸ்திரத்தைக்கொடுக்கிறன்]

சேட. [வாங்கிக்கொண்டு, வணங்கி, சந்தோஷத்துடன்] வஸந்த ஸேனையை வரச்சொல்லுகிறேன். (போகிறன்)

விதூ. ஏன், எதற்காக இப்படிக்கொத்த இரவில் வந்தாளென்று தெரிந்துகொண்டாயா?

சாரு. நன்றுய்ப்புலப்படவில்லை.

விதூ. எனக்குத்தெரியும். இன்னும் ஏதாவது கேட்பாள்.

சாரு. (தனக்குள்) திருப்திபண்ணி யனுப்புவோம்.

[நல்லுடையாபரணங்களணிந்த வஸந்தஸேனை,
விடன், சேடன் வருகிறர்கள்.]

சாரு. தோழா, போய் அழைத்துவா.

விதூ. அப்படியே (அருகில் சென்று) ஸமஸ்தமங்களானிபவந்து.

வஸந். ஐயா, சூதாடி சிரேஷ்டரே. சௌக்கியமா?

சாரு. (எழுந்து) வஸந்தஸேனே, பிரியே, சாயங்காலப்பொழுதெல்லாம் விழித்தேபோகிறது. ராத்திரி முழுதும் பெருமூச்சு விட்டேபோகிறது. நீ வந்தபின் எல்லா வருத்தத்திற்கும் முடிவு பிறந்தது. சௌக்கியமா? வீற்றிரு.

[எல்லாரும் உட்காருகிறர்கள்]

விதூ. (சாருதத்தரிடம்) தோழா, இவளை நான் ஒன்று கேட்கலாமா?

சாரு. கேளேன்.

விதூ. ஆம் இக்கும்மிருட்டில் தாங்கள் வந்ததெதற்காக. [எல்லோரும் நகைக்கிறர்கள்]

வஸந். [தனக்குள்] பிராமணன் மிகவும் அப்பாவி (பிரகாசம்) அந்த ரத்னஹாரத்தின் விலை என்ன.

விது. (சாருதத்தரிடம்) நான் அப்பொழுதே சொல்லவில்லையா

சேடி. அதைத்தன்னுடையதாகப் பாவித்து அம்மாள் சூதாடித் தோற்றுவிட்டார்கள். ஜயித்த மனுஷியனையும் தெரியவில்லை.

விது. சொன்னதைத்திருப்பிச் சொல்லுகிறாயே.

சேடி. அவனைத்தேடிப்பிடிக்கும்வரை இந்த சுவர்ணபாத்திரத்தை வைத்துக்கொள்ளுங்கள் [கொடுக்கிறாள். விதூஷகன் வாங்கிப்பார்த்து யோசிக்கிறான்]

சேடி. ரொம்ப யோசிக்கிறீர்களே. இதை முன்பே பார்த்திருக்கிறீர்களா? என்ன.

விது. இல்லை. இதன் வேலைத்திறமை யப்படியே கண்ணைப்பறிக்கின்றது.

சேடி. உமக்குக்கண் ஒருமாதிரி. அதுதானிது.

விது. நண்ப, நம்முடைய வீட்டிலிருந்து திருட்டுப்போன பாத்திரமும் ஈகைகளும் இதோ வந்துவிட்டன.

சாரு. சந்தோஷம்

விது. [சாருதத்தரிடம்] இதெப்படிக்கிடைத்தது கேட்கட்டுமா?

சாரு. கேட்டாலென்ன.

[விதூஷகன் கேட்க சேடி அவன் காதில் சொல்லுகிறாள், விதூஷகன் சாருதத்தன் காதில் சொல்லுகிறான்]

சாரு. பிரியே, அதேதானா இது.

சேடி. ஆம்.

சாரு. அம்மா, நல்ல சமாசாரம் சொன்னவர்களை வீணில் அனுப்பினதில்லை. இம்மோதிரத்தைப்பெற்றுக்கொள் [தன்விரலைப் பார்த்து மோதிரமில்லாதிருக்கக்கண்டு வெட்கப்படுகிறான்]

வஸந். [தனக்குள்] அதனால்தான் காதலிக்கப்படுகிறார்.

சாரு. (விதூஷகனிடம்) ஹா! கஷ்டம்! தரித்ரன் லோகத்திலிருந்து என்னபயன். அவனுடைய சந்தோஷ கோபங்கள் பிரதிசெய்ய முடியாததால் பிரயோஜனமற்றுப்போகின்றன. சிறகற்ற பக்ஷிக்கும் பட்டமரத்திற்கும் வற்றின குளத்திற்கும் பல் பிடுங்கப்பட்ட பாம்பிற்கும் சமானமாகத் தரித்ரனைச்சொல்லலாம்.

விதூ. போதும் புலம்பல். [வஸந்தஸேனையிடம்] அம்மா, அது கட்டியிருந்த என் கிழிந்த சவுக்கத்தைக்கொடுங்கள் அது எங்கே?

வஸந். ஆர்ய. இப்படி இந்த ரத்னஹாரத்தை யனுப்பி என்னை அவமானப்படுத்தலாமா?

சாரு. [அவமானம், சிரிப்புடன்] பிரியே கவனி. வாஸ்தவத்தை எவர் நம்புவார். எல்லோரும் என்னை இகழ்வார்கள். பிரதாபத்தையழிக்கும் தாரித்திரியம் எல்லாச் சந்தேகங்களுக்கு மிருப்பிடமல்லவா. வா போவோம்.

காக்ஷி 8.

(சாருதத்தன் வீட்டில் ஓர் அறை)

(வஸந்தஸேனையும் சேடியும் வருகிறார்கள்)

வஸந். என்ன, பொழுதுவிடிந்து விட்டதா?

சேடி. எங்களுக்கு விடிந்தது. தங்களுக்கு அஸ்தமித்தது.

வஸந். உங்கள் சூதாடி எங்கே.

சேடி. வர்த்தமானகனிடம் சொல்லிவிட்டு பூஞ்சோலைக்குப்போய் விட்டார்.

வஸந். என்ன சொன்னார்.

சேடி. வண்டியில் தங்களையழைத்துவரும்படி.

வஸந். சகி. இப்பொழுதெங்குபோவது?

சேடி. சாருதத்தரிடம்.

வஸந். நன்றாய்ச் சொன்னாய் [அவளைக்கட்டிக்கொண்டு] நான் இராத்திரியில் அவரை நன்றாய்ப்பார்க்கவில்லை. இப்பொழுது பார்க்கிறேன். என்! நான் கூடத்திற்குள் நுழைந்துவிட்டேனா என்ன!

சேடி. கூடத்திற்குள் மாத்திரமல்ல. இங்கிருப்பவர் எல்லாருடையவும் ஹிருதயங்களிலும் நுழைந்துவிட்டீர்.

வஸந். சாருதத்தர் ஜனங்களுக்கு வருத்தமோ?

சேடி. வருத்தப்படுவார்கள்.

வஸந். எப்பொழுது.

சேடி. தாங்கள் இவ்விடம்விட்டுப் போகும்பொழுது.

வஸந். அப்பொழுது எனக்கே முதலில் வருத்தமாயிருக்குமே. சகி, இந்த ரத்னஹாரத்தை என் சோதரி தூதாம்பாளிடம் கொடுத்துச் சாருதத்தர் குணங்களுக்கு ஈடுபட்டுவிட்டேன், இதை அவர்களே அணியவேண்டுமென்று சொல்.

சேடி. சாருதத்தர் கோபிப்பார்.

வஸந். மாட்டார். நீ போய்க்கொடு.

சேடி உத்திரவு (போய்விட்டு வருகிறாள்).

சேடி. தூதாம்பாள் சொன்னாள் "இது தங்களுக்கு ஆர்யரால் கொடுக்கப்பட்டது. அதை நான் வாங்கிக்கொள்வது சரியன்று ஆர்யர்தான் எனக்குப் பெரிய பூஷணம்" என்று.

(ரதனிகை ரோஹஸேனனை அழைத்துவருகிறாள்.)

ரதனி. வா. அப்பா வண்டியைவைத்து விளையாடுவோம்.

ரோஹ. (வருத்தத்துடன்) ரதனிகே, இந்த மண் வண்டி எனக்கு எதற்கு. தங்கவண்டி கொடு.

ரதனி. (வருத்தத்துடன் பெருமூச்சுவிட்டு) அப்பா. நமக்கேதடா தங்கவண்டி. அப்பாவுக்கு ரொம்பபணம் வந்தால் தங்க வண்டி வைத்து விளையாடுவோம் (யோசித்து) வஸந்தஸேனையிடம் அழைத்துப்போய் விளையாடுவோம் (வஸந்தஸேனை சமீபம்போய்) அம்மா, வந்தனம்.

வஸந். ரதனிகே, சௌக்கியமா. இக்குழந்தையார். நகையொன்று மில்லாவிடினும் சந்திரனையொத்த தன்முகத்தால் என் மனதைக்களிக்கச் செய்கிறான்.

ரதனி. இவன் சாருதத்தர் குமாரன் ரோஹஸேனன்.

வஸந். (கைகளை விரித்து) வா, குழந்தாய், என்னைக்கட்டிக்கொள். ஒரு முத்தம் தா. ரூபத்தால் தகப்பனுரைப்போலவே இருக்கிறான்.

ரதனி. ரூபத்தில்மாத்திரமல்ல, குணத்தில்கூட. இவனை வைத்துக் கொண்டுதான் சாருதத்தர் பொழுதுபோக்குவது.

வஸந். ஏன் அழுகிறான்.

ரதனி. அந்த வீட்டுப்பெரிய மனுஷியன் குழந்தை தங்கவண்டி வைத்துக்கொண்டு விளையாடிற்று. இங்கே கொண்டுவந்திருந்தது. அதைத்தனக்கு வேண்டுமென்று கேட்டான். நான் இந்தமண்வண்டியை பண்ணிக்கொடுத்தேன். இந்த வண்டி வேண்டாம் தங்கவண்டி கொண்டுவாவென்று அழுகிறான்.

வஸந். ஹா! என்ன கஷ்டம்! இக்குழந்தை அழ நான் பார்த்திருப்பதா? ஹே விதியே! மனுஷியர்களை இப்படித்தத்தளிக்க விடலாமா. அப்பா, அழாதே. தங்கவண்டி வைத்தே விளையாடலாம்.

ரோஹ. ரதனிகே, இவள் யார்.

வஸந். (தனக்குள்) உன் தகப்பனுர் குணங்களால் ஜயிக்கப்பட்டதாசி.

ரதனி. அப்பா, இந்த அம்மாள் உனக்கு தாயார்வேண்டும்.

ரோஹ. ரதனிகே, பொய் சொல்லுகிறுய். இவள் எங்கம்மாளானல் ஏது இவளுக்கு நகை.

வஸந். நல்ல வார்த்தை சொன்னுய் அப்பா (நகைகளைக் கழற்றிக் கண்ணீர் விட்டு) இதோ உன்தாயார் ஆய்விட்டேன். இந்த நகைகளை எடுத்துக்கொள் தங்கவண்டி பண்ணச்சொல்.

ரோஹ. போ நான் எடுத்துக்கொள்ளமாட்டேன். நீ அழுகிறுய்.

வஸங். (கண்ணீரைத்துடைத்து) நான் அழவில்லை. போ. விளையாடு. தங்கவண்டிபண்ணிக் கொடுக்கச்சொல்லப்பா.

[ரதனிகை பையனுடன் போகிறாள்]

[ரதனிகை மறுபடியும் வருகிறாள்]

ரதனி. அம்மா, வர்த்தமானகன் வண்டிகொண்டுவந்திருக்கிறான். வண்டி தெருவில் நிற்கிறது.

வஸங். இதோ வந்துவிட்டேன்.

காக்ஷி. 9.

(சாருதத்தன் வீட்டின் முன்புரம் தெருவையடுத்து)

(வர்தமானகன் வருகிறான்)

வர்த. விரிப்பு எடுத்துவர மறந்தேன். எடுத்துவருகிறேன் (போகிறான்)

(ஸ்தாவரகன் வருகிறான்)

ஸ்தா. அப்பா, சகாரர் வண்டியை பூஞ்சோலைக்குக் கொண்டுவரச் சொன்னார். சீக்கிரம் போகவேண்டும். வழியில் வேறொரு வண்டிச்சக்கிரம் சேற்றில் பதிந்து கிடக்கிறது. வண்டிக் காரன் ஒண்டியாயிருக்கிறான். போய்கொஞ்சம் உதவுவோம். இரு, அப்பா இதோ வந்தேன்.

(ஸ்தாவரகன் போகிறான்)

(வஸந்தஸேனையும் சேடியும் வருகிறார்கள்.)

சேடி. அம்மா! வண்டிசத்தம்போல் தோன்றுகின்றதே. வண்டி வந்துவிட்டாற்போலிருக்கிறது.

வஸங். வா போவோம். சகி, நீ போய் சிரமபரிகாரம் செய்துகொள். (வலதுகண் துடிப்பதைக்கண்டு) ஏன் அபசகுனம். சாருதத்தரைக்கண்டால் இதெல்லாம் நீங்கும்.

[சகாரன் வண்டியில் ஏறுகிறான். ஸ்தாவரகன் வருகிறான்]

ஸ்தாவ. ஒருவாறு முன் வண்டியை சேற்றிலிருந்து எடுத்துவிட்டேன். என்ன வண்டியில் பாரம். இருக்கட்டும் (போகிறான்)

(திறைக்குள் "நகரவாசிகளே, ஆர்யகன் சிறையிலிருந்து தப்பித்துக் காவலாளிகளைக்கொன்று விலங்கைத் தரித்துக்கொண்டு ஓடுகிறான் பிடியுங்கள்")

[ஆர்யகன் பயந்து ஓடிவருகிறான்.]

விர. நீ யார்?

சந்த. இங்கே வந்து மரியாதைகளைப் பெற்றிருப்பதில் உன் ஜாதியை மறந்தாய்போலிருக்கிறது.

விர. என்ன ஜாதியடா?

சந்த. சொல்லவும் வேண்டுமா [ஜாடைகாட்டுகிறான்]

விர. என்னடா? சொல்.

சந்த. இது தெரியவில்லையா? கத்தி நீட்டுகிறது. கைகால் பிடித்துவிடுகிறது. கத்தரிவேலே, இப்பொழுது ஸேனுபதியாய்விட்டாய், ஜாதி ஞாபகமிருக்குமா?

விர. அடே! சந்தனகா! உன் ஜாதி ஞாபகமில்லையா?

சந்த. சந்திரனைப்போல் சுத்தமான என் ஜாதிக்கென்ன.

விர. ஆம், என்ன உயர்ந்த ஜாதி! [ஜாடை செய்கிறான்]

சந்த. என்னடா அது?

விர. கேளடா கேள். உன் ஜாதி மேலானஜாதி தகப்பன் தம்பட்டம், தயார்பேரி, தம்பி தப்பை, நீ ஸேனுபதி.

சந்த. அடே! நான் சக்கிலியனு? நீ வண்டியைப்பார்.

விர. அடே! வண்டிக்காரா, வண்டியைத்திருப்பு.

(சேடன் வண்டியைத்திருப்புகிறான்)

[வீரகன் வண்டியில் ஏரப்பிரயத்தனப் படும்பொழுது சந்தனகன் அவன் மயிரைப்பிடித்திழுத்து தள்ளி மிதிக்கிறான்]

விர. (எழுந்து கோபத்துடன்) அடே! இதோபார்! அதிகாரிகளிடம் தெரிவித்து உன்னைத்தொலைக்காவிட்டால் நான் வீரகனன்று.

சந்த. எங்கேவேண்டுமானாலும் சொல்லிக்கொள் நாயே!

(வீரகன் போகிருன்)

சந்த. வண்டிக்காரா! போ. யாராவது கேட்டால் சந்தனகனும் வீரகனும் பார்த்தாய்விட்டது என்று சொல் போ. அம்மா, வஸந்தஸேனே இதை படையாளமாக வைத்துக்கொள்ளுங் கள் (வாளைக்கொடுக்கிருன்)

ஆர்ய. (வாளை வாங்கிக்கொண்டு தனக்குள்) நமக்கு வாளும் அகப் பட்டுவிட்டது. என் வலதுபுஜம் துடிக்கின்றது.

சந்த. அம்மா! என்னை மறவாதீர். பணத்தாசையால் நான் சொல்ல வில்லை. சினேகத்தால் நான் சொல்லுகிறேன்.

ஆர்ய. சித்தர் சொன்னபடி நடந்தால் என் சிநேகிதன் சந்தனகனை மறக்கமாட்டேன்.

சந்த. ஈசன் தங்களை ரக்ஷிப்பாராக!

(சேடன் வண்டியைக்கொண்டுபோகிருன்)

சந்த. சர்விளகனேடு நாமும் சேரவேண்டியதுதான், வீரகனை விரோதித்துக்கொண்டுவிட்டோம். இனி நாம் ஜாக்கிரதை யாயிருக்கவேண்டும்.

காக்ஷி. 10.

(கரண்டக உத்யானம்.)

(விதூஷகனும் சாருதத்தனும் வருகிருர்கள்.)

விதூ. இந்த உத்யானத்தின் அழகைப்பார்த்தாயா?

சாரு. ஆம் தோழா! இம்மரங்கள் வர்த்தகர்கள் போலவும், புஷ்பங் கள் சரக்குகள் போலவும், வண்டுகள் சரக்குக்கொள்ள வந்த வர்கள் போலவும் விளங்குகின்றன.

விதூ இக்கல்லின்மீதுட்காருவோம்.

சாரு. (உட்கார்ந்து) ஏன் வர்த்தமானகனை இன்னும் காணேம்.

விதூ. நான்கூட அவனை மிகவேகமாய் வரச்சொன்னேனே.

சாரு. ஏன் தாமதம்.

(சேடன் வருகிறான்)

சேட. வண்டி வந்துவிட்டது.

சாரு மைத்ரேயா வஸந்தஸேனையை இறங்கச்சொல்லி அழைத்து வா.

விது. என்ன, காலில் விலங்கா போட்டிருக்கிறது. தானாகவே இறங்குவதற்கென்ன (வண்டிக்குள் எட்டிப்பார்த்து) தோழா! வஸந்தஸேனை இல்லை. வஸந்தஸேனன் வந்திருக்கிறான்.

சாரு. தோழா! பரிகாசத்திற்கிது சமயமன்று. இல்லாவிடில் நானேபோய் இறங்கச்செய்கிறேன்.

ஆர்ய. (வண்டியிலிருந்து இறங்கிவந்து) இவர்தானோ சாருதத்தர்.

சாரு. (பார்த்து) இது யார்? யானையின் துதிக்கையை யொத்த கையும், சிங்கம்போல பராக்கிரமம் வாய்ந்த தோளும், அகன்ற மார்பும், சிவந்து பரவிய கண்ணும், இப்பேர்ப்பட்டவருக்கு காலில் விலங்கேன். தாங்கள் யார்?

ஆர்ய தங்களை சரணமடைந்தேன். நான் ஆர்யகன். கோபாலன் புத்திரன்.

சாரு. பாலகன் சிறையிலிட்ட ———

ஆர்ய. ஆம்.

சாரு. தெய்வம் உம்மை என்னிடம் கொண்டுவந்துவிட்டது. உம்மைக்கைவிடுவதைவிட என் பிராணனை விட்டுவிடுவேன். வர்தமான, கை விலங்கைத்தரித்துவிடு.

வர்த. உத்தரவு (விலங்கைத்தறித்துவிடுகிறான்)

ஆர்ய. சிநேகமெனும் வேறு விலங்கால் கட்டிவிட்டீர்.

விது. இவரை விடுவித்தாய்விட்டது. நாம் போவோம்.

ஆர்ய. நண்ப, சாருதத்தா, நான் இதில் வந்ததற்காக என்னை மன்னிக்கவேண்டும்.

சாரு. தாங்கள் என்னை அவ்வளவுதூரம் கௌரவப்படுத்தினதே பெரிது.

ஆர்ய எனக்கு விடையளியும்.

சாரு. அப்படியே.

ஆர்ய. நான் வருகிறேன் (புறப்படுகிறான்)

சர்ரு. நண்ப, வண்டியிலேபோம். இது யெல்லோரும் வரக்கூடிய இடம். வண்டியில்போவதுதான் நலம், வண்டியிலேபோம். (ஆர்யகன் போகிறான்). பாலகராஜனுக்கு இப்படி விரோதமாய் நடந்துவிட்டு இங்கிருப்பது பிசகு. மைத்ரேயா, இவ் விலங்கை பாழுங்கிணற்றில் போட்டுவிடு, ராஜாவின் ஒற்றர்கள் பார்க்கப்போகிறார்கள். என்ன! இடதுகண் துடிக்கின்றதே, மைத்ரேயா உடனே வஸந்தஸேனையைப் பார்க்க வேண்டும். அவளைப்பார்க்காததால் இடதுகண் துடிக்கின்றது. வா போவோம் ஏது சன்யாசி எதிரில் வருகிறான். வரட்டும் நாம் இப்படிப்போவோம்.

ஆர்ய. ஹா! என்னகஷ்டம். சித்தர் சொன்னாரென்று என்னைச் சிறையிலிட்டான். சர்விளகன் பலத்தால் தப்பினேன் (கண்ணீர்விட்டு) என் விதியப்படியிருந்தால் நான் என்ன செய்வேன். என்னைக்காட்டு யானையைப்போல் என் சங்கிலிகளால் கட்டவேண்டும். தெய்வம் நினைத்தகாரியத்தை மனிதன் தடுக்கவும் முடியுமா? ராஜாவுடன் சமாதானம் செய்துகொள்ளவா. பலவான்களுடன் விரோதித்துக்கொள்ளலாகாது. எங்கேயாவது தப்பவேண்டும். இதோ கதவு திறந்திருக்கிறது. கதவுக்குத் தாளில்லை. கீல்கள் போய்விட்டன.

[திரைக்குள் வண்டியோட்டும் சப்தம்கேட்கிறது]

ஆர்ய. வண்டி சப்தம்போல் கேட்கிறது. நம் நல்லெழுத்தால் ஒரு வேளை காலியாயிருக்குமா.

[வர்தமானகன் வருகிறான்]

வர்த. அப்பா! விரிப்பைக்கொண்டுவந்தேன். ரதனிகே, வஸந்தஸேனையிடம் வண்டி தயாராயிற்றென்று சொல்.

ஆர்ய. தாசியின் வண்டிபோலும். புறப்படத்தயாராயிருக்கிறது. ஏறுவோம். [ஏறுகிறான்]

வர்த. சலங்கைச்சப்தம் போலிருக்கிறது. வந்துவிட்டாள் போலிருக்கிறது. எருங்கள் புறப்படுவோம் [போகிருன்]

[வீரகன் வருகிருன்]

வீரக. என் சும்மாவிருக்கிறீர்கள். ஆரியகன் சிறையிலிருந்து தப்பினன் விலங்கைத்தறித்துக்கொண்டான். ஒவ்வொரு கோட்டைவாசலிலும் ஒவ்வொருவர் இருங்கள். நான் சந்தனகனைக் கூட்டிக்கொண்டு தேடுகிறேன். சந்தனக.

[சந்தனகன் வருகிருன்]

சந்த. அடே! வாருங்கள் எங்கும் தேடுங்கள் சந்தனகனிருக்கும்கால் யார் ஆர்யகனைக்கொண்டுபோகிருன் பார்ப்போம்.

வீர. சந்தனகா, யாராவது கூட்டிப்போகப்போகிருர்கள். அவன் காலையிலே தப்பித்துவிட்டான்.

[சேடன் வண்டியோட்டும் சப்தம் கேட்கிறது.]

சந்த. அடே! மூடுவண்டிபோகிறது நிறுத்து. விசாரி.

வீர. அடே! நிறுத்து. யாருடையவண்டி? உள்ளே யார்? எங்கே போகிறது ?

சேட. இது சாருதத்தருடைய வண்டி. வஸந்தஸேனை பூஞ்சோலைக்குப்போகிருள்.

வீர. சந்தனக, கேட்டாயா.

சந்த. ஆனல் போகட்டும்.

வீர. பார்க்காமலேயா ?

சந்த. ஆம்.

வீர. யார் சொன்னது. யாரை நம்புவது.

சந்த. சாருதத்தரை நம்பி.

வீர. சாருதத்தனும்! வஸந்தஸேனையாம்! யாராயிருந்தால்என்ன? பார்க்காமலா விட்டுவிடுகிறது.

சந்த. அடே! சாருதத்தரைத்தெரியாதா? வஸந்தஸேனையைத் தெரியாதா? சாருதத்தரைத்தெரியாதவன் சந்திரனைத்தெரியாதவன் என்று சொல்லலாம். அவர்குணலையர். நஷ்டத்

தையுடையவர். ஆபத்திலுள்ளோரை விடுவிப்பவர். இப்பட்டிணத்திலிவ்விருவர்தான் கௌரவத்திற்குரியவர்கள்.

வீர. எனக்கிவ்விருவரையும் நன்றாய்த்தெரியும். ஆனல் ராஜகாரியத்தில் என் தகப்பனென்றும் பார்க்கமாட்டேன்.

ஆர்ய. [தனக்குள்] இவன் முன்ஜன்மத்தில் என்பந்து. மற்றவன் என் விரோதி. ஒரே காரியத்தில் இரண்டுமனிதர்களுடைய குணம் மாறுகிறது. ஒரே அக்கினிதான் விவாஹத்திற்கும் சிதைக்கும் உபயோகப்படுகிறது.

சந்த. நீதான் ராஜா நம்பினவன், ஸேனாதிபதி நீயே பார்.

வீர. நீதான் பலவான். நீதான் பார்.

சந்த. எனக்குப்பார்க்கவேண்டியதில்லை. நீ பார்.

வீர. நீ பார்த்தால் பாலகராஜன் பார்த்தமாதிரியே. நீயே பார்.

சந்த. அடே! வண்டியைக்கொஞ்சம் தூக்கு.

ஆர்ய. காவலாளிகள் என்னைப்பார்த்தால் என்ன செய்வது. கையில் ஆயுதமில்லையே? பீமனைப்போல் செய்வோம். இக்கையேபோதும். சண்டையில் மடிவது சிறைப்படுவதிலும்மேல். இல்லை, இப்பொழுது அவசரப்படலாகாது.

சந்த. [வண்டிக்குள் பார்க்கிறான்]

ஆர்ய. சரணமடைந்தேன்.

சந்த. சரணமடைந்தோனுக்கபயம்.

ஆர்ய. எவன் சரணமடைந்தோனைக் கைவிடுகிறானோ அவனை ஜயலக்ஷ்மி கைவிடுகிறாள். பந்துக்களும் சிநேகிதர்களும் விலகுகிறார்கள். அவமானத்திற்காளாகிறான்.

சந்த. ஆ! ஆர்யகா! பருந்துக்குப்பயந்து வேடன் கையிலகப்பட்டுக்கொண்டீரே! ஒரு பக்கம் நிரபராதி, சரணமடைந்த இவர் சாருதத்தர் வண்டியிலிருக்கிறார். நம் சர்விளகர் சிநேகிதர். மற்றொருபுரம் அரசனுக்ஞை, இருக்கட்டும், அபயம் கொடுத்துவிட்டோம். வந்தது வரட்டும் [வெளியே வந்து] ஐயா ——— அல்ல அம்மாளைப்பார்த்தேன். வஸந்தஸேனை சாருதத்தரிடம் போவதாயும் இது சரியல்லவென்றும் சொல்லுகிறாள்.

வீர. சந்தனக, எனக்கதில் சந்தேகமாயிருக்கிறது.

சந்த. ஏன் சந்தேகம்.

வீர. உன் வார்த்தைகள் பயத்துடன் வருகின்றன. தொண்டையில் சிக்குகின்றன. முதலில் ஐயாவென்று சொல்லிவிட்டு மறுபடி அம்மாள் என்று சொன்னாய். எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

சந்த. ஏன் நம்பக்கூடாது. நான் தெற்குத்தியான். பேச்சுத்த வருமா.

வீர. நானும் பார்க்கிறேன்.

சந்த. ஆனால் என் பேரில் நம்பிக்கையில்லையோ.

வீர. இல்லை. நமது கட்டளை.

சந்த. (தனக்குள்) ஆர்யகர் சாருதத்தர் வண்டியில் போகிறாரென்று வெளியானால் ராஜா சாருதத்தரையும் தண்டிப்பார். இப்பொழுது என்ன செய்வது. கலகம் செய்வோம். அடே வீரக. நான் பார்த்தாய்விட்டது. மறுபடியும் பார்க்க நீ யார்?

(வஸந்தஸேனை முன் வருகிறாள்)

சகா. (காலில் விழுந்து) அம்மா தயவு பண்ணவேண்டும்.

வஸந். போ கெட்டவார்த்தை சொல்லுகிறாய் (உதைக்கிறாள்).

சகா. (கோபத்துடன்) என் தாய் முத்தமிட்டதும் தெய்வத்தைக் கூட வணங்காததுமான என் தலையை உதைத்தாயா? சேட, இவளை எங்கே பிடித்தாய்?

சேட. முன்னாலே வண்டிவழியைமறித்து நின்றது. காத்திருக்கும் சமயம் தவறி ஏறியிருப்பார்கள்.

சகா. வண்டி தவறியா வந்தாய். என்னிடம் வரவில்லை. சாருதத்தன் கிட்டப்போகிறாய். என் வண்டியில் ஏறுகிறாய்.

வஸந். நன்றாய்ச்சொன்னான். நடப்பது நடக்கட்டும்.

சகா தாமரையைப்போலிருக்கிற நகத்தையுடைய என் கையால் வாலியின் சம்சாரத்தை, ஜடாயு மயிரைப்பிடித்திழுத்தாற் போல் உன்னை நான் இழுக்கிறேன் பார்.

விட. குணவதிகளான ஸ்திரீகளைப் பிடித்திழுக்கலாகாது. உத்யானத்திலுள்ள கொடிகளின் தளிர்களை உடுக்கக்கூடாது.

சகா. (தனக்குள்) இவள் செய்த அவமானத்தால் உண்டான கோபம் இவளுதைத்ததால் அதிகமாகிவிட்டது. இவளைக்கொன்றுவிடுகிறேன் (விடனிடம்) நல்ல சாப்பாடும் நல்ல வேஷ்டியும் வேண்டுமா உனக்கு.

விட. எதற்காக கேட்கிறீர்.

சகா. நான் சொன்னபடி செய்தால் தருகிறேன்.

விட. செய்யத்தக்கதானுல் நன்ருய்ச் செய்கிறேன்.

சகா. செய்யக்கூடாதது ஒன்றுமில்லை.

விட. ஆனுல் சொல்லும்.

சகா. வஸந்தஸேனையைக்கொன்றுவிட வேண்டும்.

விட. இவளைக்கொன்றால் நான் பரலோகத்திற்கெப்படிப்போவது.

சகா. நான் அனுப்பிவிடுகிறேன். இங்கே யார் பார்க்கப்போகிருர்கள்.

விட. பத்துதிக்குகளும், வனதேவதைகளும், சந்திர சூரியர்களும் தர்மராஜனும், ஆகாசமும், பூமியும், மனதும், நமது பாப புண்யச் செய்கைகளுக்குச் சாக்ஷிகள்.

சகா. அப்படியானுல் துணியைப்போட்டு மூடிவிட்டுக்கொன்றுவிடு.

விட. போ சண்டாளா.

சகா. இந்தக்கிழம் பயப்படுகிறது. சேடனைக் கேட்போம். சேடா, சொல்லுகிறபடி செய்கிருயா?

சேட. நீர் சொல்லப்போவது எனக்குத்தெரியும். நீர் என்னை என்ன பண்ணினுலும் நான் மாட்டேன்.

விட. ஸ்தாவரகா, நன்ருய்ச்சொன்னுய்.

சகா. (தனக்குள்) இந்தக்கிழம் அதர்மமென்கிறது. இந்தப்பய பரலோகத்திற்கு பயப்படுகிருன். நான் எதற்கு பயப்பட வேண்டும். நானே கொன்றுவிடுகிறேன். இவர்கள்முன் டாது. இவர்களை போக்குச்சொல்லிப் போகச்சொல்லு

றேன். (பிரகாசம்) ஐயா, நான் வேடிக்கையாகச்சொன்னேன். நான் இவளுக்காக என்ன பாடுபட்டிருக்கிறேன். நான் கொல்வேனு. (புஷ்பங்களைப்பரித்துத்தன்னை சிங்காரித்துக்கொள்ளுகிறான்)

விட. வா, சேடா. இவன் ஒரு கெடுதியும் செய்யமாட்டான் போலிருக்கிறது. போவோம் வா.

(விடனும் சேடனும் போகிறார்கள்)

சகா. வஸந்தஸேனே! வஸந்தஸேனே!

வஸங். (துக்கித்து நிற்கிறாள்) ஓட்டமொவை யனுபவித்துவிட்டு பொசைபபார்ப்பேனு!

சகா. அவன் ஓட்டுமா! நான் பொரசு! இன்னும் அவனையே நினைத்துக்கொண்டிருக்கிறாயா?

வஸங். என் மனதிலேயே பதிந்துவிட்டாரே.

சகா. ஆம். உன் மனதிலிருக்கிறவனை ஒரே அடியில் நொறுக்கிவிடுகிறேன். இரு, சாருதத்தா! இரு.

வஸங். இன்னும் சொல் அப்புண்யாக்ஷரங்களை.

சகா. அந்த சாருதத்தன் இப்பொழுது காப்பாற்றுகிறதுதானே.

வஸங். இங்கிருந்தால் காப்பாற்றுவார். சாருதத்தருக்கு நமஸ்காரம்.

சகா. இன்னும் அவனையே நினைக்கிறாளே. (வஸந்தஸேனைக் கழுத்தை நெறிக்கிறான்) அவனையே நினைத்துக்கொள் அவனையே. மூச்சிருக்கிறதா? இல்லை. விடனை பயமுறுத்தி ஓடச்செய்வோம். சேடனை விலங்குபோட்டு விடுகிறேன். பிறகு இது வெளிக்குவராது. இந்தத்துணியால் மூடிவிடுகிறேன். கூடாது, என் பெயர் போட்டிருக்கிறது. இவ்வுலர்ந்த சருகுகளால் மூடிவிடுகிறேன். இப்பொழுது அதிகாரியிடம்போய் பிருது எழுதிவைக்கிறேன். உத்யானத்தில் அவள் நகைகளுக்காக சாருதத்தன்கொன்றுவிட்டான் என்று (போகிறான்)

(சம்வாஹகன் சன்யாசியாக வருகிறான்)

ஸம்வா. (ஈரவஸ்திரத்தைக்கொண்டுவருகிறான்) வஸ்திரத்தை நன்றாய் தோய்த்தாய்விட்டது, மரத்தில் உலர்த்துவோம். இங்

கே குரங்குகள் உபத்திரவம் அதிகம். பூமியில் போடலாம் என்றால் மண்புரளும். இவ்வுலர்ந்த சரகுகள் மேல் உலர்த்துவோம். புத்தருக்கு நமஸ்காரம். (உலர்த்துகிறான்) அவ் வஸந்தஸேனை நமது கடனைக்கொடுத்தது முதல் அவளுக் கடிமையாய்விட்டிடேன். (பார்த்து என்ன இலைகள் அசைகின்றன. ஒருவேளை காற்றினாலோ (வஸந்தஸேனை மூர்ச்சை தெளிந்து கையை நீட்டுகிறாள்).

ஆ! என்ன! கை! பெண்ணின் கைபோலிருக்கிறதே! இந்தக்கை நாம் முன்னமே பார்த்ததுபோலிருக்கிறதே. (பார்த்து) நமக்கபயம் கொடுத்தகைதான் பார்ப்போம் [நெருங்கிப்பார்த்து] ஆ! வஸந்தஸேனை.

[வஸந்தஸேனை தாகம் என்று ஜாடை செய்கிறாள்]

சந்யா. தாகம்போலிருக்கிறது. குளமோ வெகுதூலை. இருக்கட்டும். இத்துணியைமேலே போடுவோம் [துணியை மேலே போடுகிறான்]. வஸந்தஸேனை எழுந்துட்காருகிறாள். [சந்யாசி துணியால் வீசுகிறான்]

வஸந். ஐயா, தாங்கள் யார்?

சந்யா. 10 பொன்கொடுத்து காப்பாற்றினீர்களே அவன்.

வஸந். ஆம், ஞாபகமிருக்கிறது. ஆனால் முழுதும் ஞாபகமில்லை. ஆ! என் நான் பிழைத்தேன்.

சந்யா. அம்மா! இதென்ன.

வஸந். [வருத்தத்துடன்] தாசியாய்ப்பிறந்த...ன் பலன்.

சந்யா. இக்கொடியைப் பிடித்துக்கொண்...ங்கள் [கொடியைக்கொடுக்க வஸந்தசேனை அ... ...ண்டு எழுந்திருக்கிறாள்].

சந்யா. அம்மா! சமீபத்தில் ஆசிரமத்தில்... ...றாள். அங்கே கொஞ்சம் சி... வீட்டிற்குப்போகலாம்.

காக்ஷி 11.

[காண்டக உத்யானத்தின் மறறெருபக்கம்]
(சகாரனும் விடனும் வருகிருர்கள்)

விட ஐயா, இக்கல்லாசனத்திலுட்காருவோம்.

சகா ஏன் இன்னும் ஸ்தாவரகன் வண்டியைக்கொண்டுவரவில்லை. சீக்கிரம் வரச்சொன்னேனே. வெயில் ஜாஸ்தியாயிருக்கிறது, பசியும் அதிகம், நடக்கவும் முடியவில்லை.

விட. ஆம். பசுக்கள் அசைபோட்டுக்கொண்டு நிழலில் படுத்திருக்கின்றன. காட்டுமிருகங்கள் தாகத்தால்வருந்தி சரஸ்ஸுகளிலுள்ள சுத்தநீரைக்குடிக்கின்றன. வீதிகள் சுடுவதால் மனிதர்கள் வழிநடப்பதில்லை. வெயிலுக்குப்பயந்து எங்கேயாவது வண்டியை ஒதுக்கி நிறுத்தியிருப்பான்.

சகா. ஆரியன் கால்கள் என்தலையில் வீழ்கின்றன பக்ஷிகள், பறவைகள், சகுனங்கள் மரங்களை யடைகின்றன. மனிதர்கள், புருஷர்கள், நரர்கள் பெருமூச்சு விடுகிருர்கள். வெயிலுக்காக எல்லாரும் வீட்டிற்குள்ளே போகிருர்கள். (பாடுகிருன்) ஐயா, பாட்டைக்கேட்டீரோ?

விட. சொல்லவேண்டுமா? சாக்ஷாத் கந்தர்வகானம்தான்.

சகா. சந்தேகமில்லை. ஏன் சேடனை இன்னும் காணோம்?

விட. சும்மா இரும் இதோ வருகிருன்.

[சேடன் வண்டியோட்டிக்கொண்டுவருகிற சப்தம் கேட்கி[illegible]து சேடன் வருகிருன்]

சேட. சகார[illegible] [illegible]க்கப்போகிருன். நேரமாகிவிட்டது.

[illegible]னை வண்டிக்குள்ளிருக்கிருள்)

[illegible]! வர்தமானகன் குரலல்லவே. ஒருவேளை [illegible] ஏதாவதுவண்டியையனுப்பினரா என்ன? [illegible]கின்றதே. மனது சஞ்சலப்படுகின் [illegible]கும்போலிருக்கிறதே.

சகா. வண்டி வந்துவிட்டதுபோலிருக்கிறது.

விட ஆம்.

சகா. ஆம் ஸ்தாவரகா, வந்தாயா?

ஸ்தா. ஆம்.

சகா. வண்டி.

ஸ்தா ஆம்.

சகா. மாடு.

ஸ்தா. ஆம்.

சகா. நீ.

ஸ்தா. ஆம்.

சகா. ஆனால் வண்டியைக்கொண்டுவா.

ஸ்தா எந்த வழியாக.

சகா இதோ, இப்படி.

ஸ்தா. வண்டி ஒடியும், மாடுகளும், நானும் சாவோம்.

சகா. அடே! நான் யார் தெரியுமா! வண்டிபோனால் புதுவண்டி பண்ணுகிறேன், மாடுபோனால் வேறுமாடு வாங்குகிறேன். நீ போனால் இன்னொரு வண்டிக்காரன்.

ஸ்தா. நீங்கள் சொன்னதெல்லாம் சரிதான். அப்புறம் நான் உங்களுக்கிருக்கமாட்டேனே.

சகா. அடே எல்லாம் போனாலும் சரி. இப்படித்தான். வண்டி வரவேண்டும்.

ஸ்தா. தொலையட்டும். (போகிறான், [illegible] படியும் வருகிறான்) என்ன ஆச்சரியம், வண்டியுடையவி[illegible] ஐயா, வண்டிவந்துவிட்டது.

சகா. மாடு ஒடியவில்லை. தலைச்[illegible] [illegible]. நீ [illegible] லை.

ஸ்தா. இல்லை.

சகா. ஐயா, வா வண்டி[illegible]

பரமகுரு, நீ [illegible]

விட. [illegible]ப்படிபே[illegible]

சகா. அடே! நில்[illegible]

ஏறுவதற்கு! நா[illegible]

184407
சென்னை-600 008

விட. தங்...

சகா. நான் மரியாதைக்குச் சொன்னல் நீ என்னை முதலில் ஏறும்படி சொல்லவேண்டாமா?

விட ஏறுங்கள்.

சகா. சேடா வண்டியைத்திருப்பு.

ஸ்தா. திருப்பியாய்விட்டது.

சகா. (ஏறிப்பார்த்து, பயந்து இறங்குகிருன், விடனைக்கட்டிக்கொண்டு) ஐயா, செத்தேன் நீயும் செத்தாய் வண்டிக்குள் பிசாசோ, திருடனே இருக்கு. பிசாசானல் நம்மை திருடிவிடும். திருடனுனல் நம்மை மத்தின்று விடுவான்.

விட. பயப்படாதே வண்டியில் பிசாசு ஏது. சேடன் நிழலைக்கண்டு பயப்பட்டிருப்பாய்.

சகா. ஐயா, வண்டியில் யாரோ பெண்பிள்ளை பார்.

விட. ஸ்திரீயாயிருந்தால் நாம் சீக்கிரம் போய்விடுவோம் நாம் பார்க்கலாகாது.

வஸந். (ஆச்சர்யத்துடன் தனக்குள்) என்ன! நம்முடைய விரோதி சகாரனு! என்ன சங்கடம்! நாம் இங்குவந்தது விபரீதமாக முடிந்ததே, என்ன செய்வது.

சகா. ஏன் ஐயா பயப்படுகிருய், வண்டியைப்பார்.

விட. அப்படியே.

சகா. என்ன நரி பறக்கிற... காகம் ஓடுகிறதா, கண்களால் தின்று விடுவாளா, ...ல் பார்த்துவிடுவாளா, நான் ஓடிவிடட்டுமா?

வி... ...வருத்தத்துடன் தனக்குள்) ...ப்பின்பற்றுகிறது! என்ன கஷ் ...போல் விளங்கும் ஹம்ஸத் ...வுடையுமா? வஸந்த ...மன்று. ...ன் அவ ...பணத்...சையால்